[illegible]
V2 No·13 28.Mar 1429

X
m211, N28 KN
N29·2·13
189048

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளி வரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஹு மார்ச்சு மீ 28உ [No. 13.

OFFICE OF THE R... 1929 MADRAS

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 241
2. அப்பர்
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 243
3. ஏமாங்கதத் திளவரசன் (A Novel)
T. N. சேஷாசலம் B. A.,B. L. 245
4. வில்லி பாரத விளக்கம்
T. S. நடராஜப் பிள்ளை B.A., B.L. 248
5. தமிழ்ப் பாடம் 250
6. மலர்வனம் ('மதுகரம்') 252
7. கம்பராமாயணம்
T. N. சேஷாசலம் B. A, B. L. 254
8. வர்த்தமானம் 259

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாஞலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பிஞங்கு தென்ஞப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

கலாநிலயம்

கலைகளே கதி.

VI

-189048

வேறுவேறென யாவற்றையும் பிரித்துப் பிரித்துப் பாழாக்குகின்ற பொய்வாழ்க்கையிலுழன்று அழிந்துபோகாமல், யாவும் ஒன்றே என்னுமச் சாச்வத சத்தியத்தின் இருதயத்தில் நிலைத்து அமர்கின்ற மெய்வாழ்விற்கு உரியவர் நாம் ஆகவேண்டுமெனின், இதன் தன்மை யின்னதென்ற அறிவும், இதனை எய்த வேண்டுமெனும் ஆசையும் மாத்திரம் இருந்தால் போதாதென்றும், நம்மனம் உலகத்தோடு ஒன்றாய் இயங்குதற்குப் பயிற்சியும் வேண்டுமென்றும், அப்பயிற்சியைக் கலைகள் மனத்திற்கு அளிக்கவல்லனவென்றும், அப்பயிற்சியில்லாக் காலையில் நாம் கற்றதுங் கேட்டதும் அவலமாய்ப் போய்விடுகின்ற அநுபவத்தை இதுகாறும் இவ்வரிசைத் தலையங்கங்களில் குறித்துக்கொண்டு வரலாயினேம். இனி, அத்தகைய பயிற்சியைக் கலைகள் அளிக்குமாறு எவ்வாறு என்பதை இன்று விளக்க முயல்வோம்.

காவியம் நாடகம் சிற்பம் சித்திரம் சங்கீதம் என்று பல்வகைத் தோற்றங்களாய் விரவிவருகின்ற கலையினது தோற்றங்கள்யாவும் அழகு என்னும் ஓரே தத்துவத்தின் அம்சங்கள் என்னும் வாய்மையை யாவரும் அறிவர். கலாநிலயமும் இதனைச் சென்றவாண்டு துவக்கத்தில், தான் செய்யுங் கருமத்தின் தன்மையையும் அதனைச் செய்கின்ற வகையையும்பற்றி வரைந்த பல தலையங்கங்களில் விளக்கமாக வரைந்துளது. கலைகளிற் பழகுவதென்பதும் அழகொடு பழகுவதென்பதும் ஒன்றே. அழகு என்பதை இயற்கை அழகு செயற்கை அழகு என இருவகைகளாகப்பிரித்துக்கொள்ளலாம். ஆஞல், இன்னவகை அழகைப் பிரிப்பது உண்மையில் ஏற்றதாகுமோ என்னுஞ் சந்தேகத்திற்கு இடமானதே. எனினும் நமது கருத்து விளங்குவதற்கு உதவியாய் அவ்வகைப் பாகுபாடொன்றைச் செய்துகொள்வோம். மனிதனது செயல் ஒன்றுஞ்சேராமல் தாமாக அழகாக அமைந்திருப்பனவற்றை இயற்கையழகு உடையனவென்றும், மனிதஞல் அழகெனும்படி அமைக்கப்பெற்றிருப்பவைகளைச் செயற்கையழகு பெற்றவைகளென்றும் இக்கட்டுரையின் நிமித்தங் கருதிக்கொளல்வேண்டும். உடுத்திரள் இலங்கும் நடுநிசிவானமும், பொழில்வளர் தருக்களின் எழில்தருவனப்பும், குயிலின் குரலும் குழவியின் மழலையும், மதியின் நிலவும் மலரின் மணமும், மோதலைக் கடலும் மீதெழுஞ் சுடர்களும், ஆற்றுநீர்ப் பெருக்கும் ஊற்றுநீர் ஓடையும், மயிலின் சாயலும் மடவார்படிவமும், இவையனைய தோற்றங்கள் எண்ணிறந்தன இயற்கையழகு வாய்ந்தவை என்னப்படும். சொன்னயமும் பொருள்நயமும் செறிந்த கவிகளும், சிற்பப்பொருள்களும் இன்னிசைப் பாடலும், சித்திரச்செய்தியும், நடனமும் செயற்கையழகால் சிறக்கின்றன. செயற்கையால் அழகு பெறுகின்ற

-5-

பொருள்களிலும் இயற்கையாய் அழகு அமைந்தவை மேன்மையுடையவைகளே. அவ்வியற்கைபோல் தாம் விளங்கவேண்டும் என்னும் முயற்சி கைகூடிய அளவிற்கு ஏற்றபடியன்றோ கலைப்பொருள்களின் அழகும் மதிக்கப்படலாகின்றது. ஆதலின் கலைகளிற் பழகுவதென்பதும் அழகொடு பழகுவதென்பதும் ஒன்றே, என்று சாற்றுமுன் நாமிங்கு உரைத்த வாசகத்தைச் சிந்தித்துப்பொருள் கொள்ளல் வேண்டும். கலைகளைப் பயில்வது ஒன்று மட்டுமே அழகுடன் பயில்வதாகும் என்ற பொருள் அவ்வாசகத்திற்கில்லை. இயற்கைப் பொருள்களுக்குத் தம் உள்ளம் ஈந்து உவப்பொரும் அழகினது பழக்கத்தைப் பெறுபவர் ஆவர். எனினும் அவ்வகை அழகிற்கு ஈடுபடக்கூடிய பயிற்சியை மனத்திற்குச் செய்து வைக்கின்றதிறமை கலைகளின்பாலே உளது. அழகிற்குக் கலைகள், பொருள்களைக்காட்டிச் சிறுவர்க்குப் போதிக்கும் பாலபாடம் (object lessons) போன்றன. முன்னிங்குச் சொன்னபடி கலையழகுஇயற்கையழகிற்கு மாதிரிப்பிரதியாய் (models) அமைந்திருக்கின்றதாதலால் மாதிரியின் பயிற்சியால் மூலத்தைக்கற்பது எளியமுறையாக எங்கும் கையாளப்படுவதை அனைவரும் அறிந்துளர்

ஒலிஒளி உருவம் என்னப் பொருள்களோடுகலந்து தோன்றுகின்ற தோற்றங்களில் அழகை, இயற்கையழகென்றும் செயற்கையழகென்றும் பிரித்தோம். மற்றினி இன்னொன்று கூறுதற்குளது. அழகெனும் தத்துவமோ, பொருள்களோடு கலந்து ஐம்பொறிகளின் மூலமாய் உணர்வதற் கேற்ற தோற்றங்களோடு முடிந்ததில்லை. இந்தத்தத்துவம் ஒன்றே உணர்ச்சிக்கு அழகாய்நின்று, செய்கைக்கு அன்பாய் அமைந்து, அறிவிற்கு மெய்ம்மையாய் எட்டுகின்றது. இந்தவிடயத்தை ஸ்ரீமான் T. N. சேஷாசலம் தம்கம்பராமாயணக் கட்டுரைகளொன்றில் (வால்யூம். I. பக்கம் 476), "விராவி அளித்தருள் மெய்ப்பொருளிற்கே இராமன் எனப் பெயர் ஈந்தனன்" என்று இராமபிரானுக்குத் திருநாமகரணஞ் செய்கின்றதைப்பற்றிக் கூறுகின்ற செய்யுளின் உரையில் ஒரு சிறிதுகுறிப்பித்திருக்கின்றார். அம்மெய்ப்பொருளைத்தான்சிவம்என்றும்அழைக்கின்றனராகையால் அன்பும் சிவனும் ஒன்றுவதை அழகின் தொடர்பினாலும் உணர வல்லவராகின்றோம். தோற்றமாகின்றவகையில்செயற்கையால் அமைகின்ற கலையழகு தானாக நிற்கின்ற இயற்கையழகைப் பயின்றனுபவிப்பதற்குப் பாலபாடமாவதுபோல், தத்துவமாகக் கருதும்போது தோற்றவகைத்தாய அவ்வழகு மீண்டும் செய்கையின் அழகாகிய அன்பிற்கும் அறிவிற்கியன்ற அழகாகிய சத்தியத்திற்கும் பாலபாடமாகின்றது. ஏனெனில், செய்கைக்குஒன்று சாத்தியமாவதையும், அறிவிற்கு ஒன்று நிச்சயமாவதையும் விட உணர்ச்சிக்கு ஒருவன் ஆளாவது மிகவும் எளியது. ஆதலால் ஐம்பொறிகளின் உணர்விற்கு இலக்காகிய அழகில் முதிர்ந்தக்கால் செய்கைக்கு உரியதாய அன்பு இயற்கையாகிப் பின் புத்திக்குச் சாத்தியமாகிய சத்தியநிலையையும் எய்திவிட இயலும். மனம் எதனுடன் இடைவிடாமல் பயில்கின்றதோ அதன் தன்மையை அது அடைகின்றதென்பது பிரசித்தம். அழகுடன் பழகிவருமாயின் அம்மனம் அழகுமயமாய் விடுகின்றது. ஆதலால் கலை—இயற்கை—அன்பு—சத்தியம் என்ற நான்கு வகுப்புக்களில் முறையே மாறிமாறி உயர்ந்து ஒருவன் முத்திநிலை அடைதல்இயலும் என்பதுஇக்கலாநிலயம் கொண்ட கொள்கை. கலையினது உணர்வு ஒருவனை உய்த்துச்சென்று சத்தியநிலையில் சேர்க்கின்றது. அச்சத்தியம் என்பது தான் என்ன! 'சர்வம் பிரம்மமயம் ஜகத்' என்ற மகாவாக்கியத்தின் பொருளேயாம். அப்பொருளுக்கிணங்கயாவும் ஒன்றே என்ற பான்மையில் வாழ்கின்ற வாழ்வே மெய்வாழ்க்கை என்று செப்பவும் வேண்டுமோ. மற்று, அம்மெய்வாழ்க்கையில் ஒருவனை உய்த்துச் சென்று உய்யக் காணும் நலமெலாம் இவ்வண்ணம் கலைகளிலே தங்கியிருக்கின்றன.

கலைகளொடுபழகி, அதன் வழியாய் அழகிற்கு ஈடுபடும் ஓர் உணர்வையெய்தி, அவ்வுணர்வினால் எல்லாம் ஒன்றே என்னும் மெய்ம்மைக்கு மனிதன் ஆளாக நேர்கின்ற இயற்கை முறையைச் செப்பினோம். இனி, எல்லாம் ஒன்றே எல்லாம் ஒன்றே என்று நம் மனம் கருதிக்கருதி மெல்லமெல்ல அம்மெய்நிலைக்கு முதிர்கின்ற பயிற்சியை அழகினது அனுபவ உணர்வு எவ்வாறு அளித்துதவுகின்றதென்பது மட்டுமே இறுதியாக நாம் உரைப்பதற்கிருக்கின்றது. வேறுவேறாகப் பிரித்துக்கொண்டுபோவது பொய்வாழ்க்கைக்கு அடிகோலிவைப்பதாகும் என்று முன்னரே கூறியிருக்கின்றோம். இவ்வுலகத்திலுள்ள பொருள்களை நாம் நமது பேதமையில் பொதுவாக இரு பெரும்பிரிவுகளாக மனத்திற்குள் பிரித்துக் கருத நேர்கின்றது. "எனக்குப் பயன்படக்கூடிய பொருள், எனக்குப் பயன்பட மாட்டாதபொருள்," என்பது அந்தப் பிரிவாகும். சுருங்கச் சொல்லின், இப் பெரும்பிரிவிலிருந்து சிறுசிறு உட்பிரிவுகள் ஏற்பட்டு, 'எனது உனது' என்னும் மாறுபாடும், வேண்டியவர் வேண்டாதவர் என்னும் விருப்பு வெறுப்பும் உண்டாகிக் காமக்குரோதாதிகள் கிளைத்துச் சுயநயம் மிகுந்து தன்சுயநய அவாவினளவு உடைமையும் உரிமையும் எய்துவது எப்பொழுதும் இயல்வது ஒன்று அன்றாகையால் மனிதன் தன் வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொள்பவனாகின்றான். எதனை ஒருவன் விரும்புகின்றானோ அதனை அவன் உடனே தன்னுடைமை ஆக்கிக்கொள்ளத் தவிப்பவனாகின்றான். பிரிக்கின்ற பழக்கத்தின் கடைசியெல்லையாய்த் தன்னைப் பிரபஞ்சத்தினின்று வேறாகிப் பிரித்துக்கொண்டுவிட்டானாகையால் தன்னுடைய தனி உடைமையாய் ஆக்கிக் கொள்ள வேண்டுமென்னும் அவா உடனுக்கு உடன் தோன்றாமல் ஒன்றையும் அவனால் விரும்பி மகிழ்வதற்கு இயலாமற் போய் விடுகின்றது. எனவே, தான் தன்னுடைய தனி உடைமை ஆக்கிக்கொள்ள வேண்டும் என்று ஒருபோதும் எண்ண இயலாதவைகளை விரும்பி மகிழப் பழகுவானாயின் பிரித்துப் பிரித்துச் சென்றமனத்தின் செலவு தடைப்பட்டுப் பிறகு அது சேர்த்துச் சேர்த்துக் கருதத் தலைப்படும். உண்மையாய்ப் பூரணமாய்த் திகழ்கின்ற அழகிற்கே ஒருவனுக்குச் சுயநய அவாத்தோன்றாமல் மகிழ்வை மாத்திரம் விளைவிக்கின்ற சக்தியுளது. சூரியோதயத்தைக் கண்டு மகிழ்கின்ற ஒருவன் உடனே அச்சூரியனைப் பிடித்துத்தன் வீட்டில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று எண்ணுவதில்லையே. கவிநயம் மிகுந்த பாசுரம் ஒன்றைப் படித்து இன்புறுகின்றவன் உடனே அப்பாசுரத்தைத் தனதாக்கிக் கொள்ளவேண்டுமென்று விரைகின்றானல்லன். இனிமையாய் ஒருவன் பாடுவதைக் கேட்டவன் அப்பாடகன் வாயினின்று பாடலைக் கவர்ந்து கொண்டு போய்விட வேண்டுமென்று எண்ணுவதும் உண்டோ. இப்படியே கலைகளின் அழகிலும் இயற்கை அழகிலும் ஒவ்வொன்றிலும் தனி உடைமை நினைவின்றி மகிழ்விக்குந் தன்மையைக் காணலாம். ஆதலின் அழகிற்பழகுவோன் தனது என்று பிரித்துக்கொள்ளவேண்டிய அவசியத்தை மெல்ல மெல்ல மறக்கின்றான். தன்னுடைய சார்பின்றிக் கருதுவோர்க்கு நிகிலப்பொருள்கள் யாவும் ஒன்றே. மெய்வாழ்க்கையும் அவர்களே அடைந்தனர். ஆதலாலே நாம் துன்பம் நீங்கிய மெய்வாழ்க்கை வாழ்கின்ற மேன்மக்களாதற்குக் கலைகளே கதி என்று இயம்பத்துணிந்தோம்.

OFFICE OF THE RE... MADRA

அப்பர்

3. அப்பர் சிவஸ்தல யாத்திரைகளைப்பற்றிய புராண வரலாறு

4. திருச்சிராப்பள்ளி ஜில்லாத் திருப்பதிகள் யாத்திரை.

230பக்கத் தொடர்ச்சி

திருவானைக்காவல் என்பது சிவபெருமானை அப்பு † லிங்கமாய்ப் பெற்ற ஒரு சிறந்த திருப்பதியாகும். சிதம்பரத்தில் கடவுளை ஆகாய லிங்கமாயும், திருக்காளத்தியில் வாயு லிங்கமாயும், திருவண்ணாமலையில் தேயுலிங்கமாயும் வழிபடுவதுபோல் இத்தலத்தில் கடவுளை ஜல ரூபமாய்க் குறிசெய்து வழிபடுவது தொன்றுதொட்டு வழங்கிவருகின்றது. இவ்வாலயத்தில் * சிலந்தி பந்தரிட்டு அருள்பெற்றதென்பதைத் தேவாரத்திலும் காணலாம். இப்பதியிலுள்ள நீர்த்திர ளுருவாய்க் ‡ காணப்படும் சிவபெருமானை அப்பர் பாடிய பாடல்களுள் ஒரு திருக்குறுந்தொகைப் பதிகமும், இரண்டு திருத்தாண்டகங்களும் உள. இத்திருக்குறுந்தொகையில் "நடையை மெய்யென்று நாத்திகம்" பேசுவதைக் கண்டித்ததுபோல், திருத்தாண்டகத்திலும், "எத்தாயர், எத்தந்தை, எச்சுற்றத்தார், எம்மாடு சும்மாடா மேவர் நல்லார், செத்தால் வந்துதவுவா ரொருவரில்லை, சிறுவிறகால் தீமூட்டிச் செல்லாநிற்பர்" என்பதை அப்பர் விளக்குவாராயினர். இப்பதிகங்கள் வேதாந்தசாஸ்திர சாரம் போல் தத்துவ விளக்கத்தை உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காட்டுகின்றன.

¶ திருவானைக்காவலினின்று திருவெறும்பியூர்மலையென்னும் திருப்பதிக்கு $ விசயம் செய்தனர். இத்தலத்தின் பிஞ்ஞகன்பேரில் பாடிய திருக்குறுந்தொகை ஒன்றும், திருத்தாண்டகம் ஒன்றும் ஆக இரண்டு பதிகங்கள் உள. இவ்விரண்டிலும் கண்ணுதல்செய்த § இயற்கையின் நிலைவிரித்துக் கூறப்பட்டது. அவ்வாறு கூறுதலுடன் தான் கல்வியின் செம்மை யறியாதவரென்றும், இறைவன் திருவருளாலே "செந்தமிழ்" அறிந்து கவிபாட நேர்ந்தாரென்றும், அக்கல்வியால் இறைவனதருள் ஒவ்வொரு கலைகளினும் விளங்குவதைப்பண்ணிலும் எண்ணிலும்கண்டாரென்றும், அவற்றின் திறத்தை யறிய ஞானப்பொறி தந்து சன்மார்க்கத்தை உணரச்செய்து ஆட்கொண்ட அத்தனை யாவர்மனதும் உருகும்வண்ணம் புகழும் தன்மையனவாய் இப்பதிகங்கள் விளங்காநின்றன. திருவெறும்பியூர் என்னும் திருப்பதியை விட்டபின் அப்பர் திருச்சிராப்பள்ளிக்குத் தாயும்ஆன பிரானைத் தரிசிக்கச் சென்றனர். இத்தலத்தில் இவர் பாடிய ஒரு திருக்குறுந்தொகைப் பதிகத்தில் மூன்று பாக்களே யுள. அவற்றின்பயனை பின்வரும் அத்தியாயங்களிற் காண்க. திருச்சிராப்பள்ளி மலையும் திருக்கற்குடியும் * திருப்பராய்த்துறையும் † இறைஞ்சியபின்னர் அவற்றின் மருங்கிலுள்ள பல பதிகளைக் கைதொழுது திருப்பைஞ்ஞீலிக்கு ‡ அப்பர் சென்றாரென்று பெரிய புராணம் கூறும்.

திருப்பைஞ்ஞீலிக்கு அப்பர் சென்றது வசந்த $ கால ஆரம்பமென்பதை அப்பர் இத்தலத்தில் பாடிய திருக்குறுந்தொகையால் அநுமானிக்கலாம். இவ்வநுமானத்திற்கு இசையத் திருச்சிராப்பள்ளிக்குச் சென்ற காலத்தில் காவேரியாற்றில் வெள்ளம் புரண்டு போவதால் மன்பதை காவேரி கடக்கத் தெப்பம் கட்டுங் காட்சியையே ¶, அப்பதியின் திருக்குறுந்

---

† லிங்கம் என்பதற்கு அடையாளம் அல்லது அறிகுறி என்னும் பொருளே.

* சிலந்தியு மானைக் காவிற் றிருநிழற் பந்தர் செய்து
உலந்தவ ணிறந்த போதே கோச்செங்க ணானு மாகக்
கலந்தநீர்க் காவி ரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்ட னாரே.
திருக்குறுக்கை-திருநேரிசை 4.

‡ ஆதியனை யெறிமணியி னோசை யானை
அண்டத்தார்க் கறிவொண்ணா தப்பான் மிக்க
சோதியனைத் தூமறையின் பொருளான் றன்னைச்
சுரும்பமரு மலர்க்கொன்றைதொன்னூல்பூண்ட
வேதியனை யறமுரைத்த பட்டன் றன்னை
விளங்குமல ரயன்சிரங்க ளைந்திலொன்றைச்
சேதியனைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே.
திருவானைக்கா-திருத்தாண்டகம், 6.

¶ திருச்சிராப்பள்ளிக் கோட்டை (மலை) யிலிருந்து வடக்கே மூன்று மைலில் கற்சாலை மார்க்கமாய் இதற்குச் செல்லவேண்டும்.

$ இதுஒரு ஸ்டேஷன். இதற்கு ½ மைலில்வடமேற்கே கற்சாலை மார்க்கத்தில் கோயிலைக் காணலாம்

§ (i) கறும்பி யூர்வன வைந்துள காயத்தில்
திறம்பி யூர்வன மற்றும் பலவுள
குறும்பி யூர்வதோர் கூட்டகத் திட்டெனை
எறும்பி யூரான் செய்த வியற்கையே
திருவெறும்பியூர்-திருக்குறுந்தொகை—5

(ii) நீணிலவு மந்தியு நீரு மற்றை
நெறியிலங்கு மிருகாலு மாகா சமும்
வாணிலவு தாரகையு மண்ணும் விண்ணும்
மன்னுயிரு மென்னுயிருந் தானாஞ் செம்பொன்
ஆணியென்றும் அஞ்சனமா மலையே யென்றும்
அம்பவளத் திரளென்று மறிந்தோ ரேத்தும்
சேணெறும்பி யூர்மலைமேன் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப்பெற்றே னேனே
திருவெறும்பியூர்—திருத்தாண்டகம் 7,

* திருக்கற்குடி, இது உய்யக்கொண்டான் மலையென்று வழங்கும். திருச்சிராப்பள்ளி ஜங்க்ஷன் (சேர்க்கை) மார்க்கமாய் வடமேற்கே 1½ மைலிலிருக்கிறது. இப்பதியில்அப்பர் பாடிய திருத்தாண்டகம் பதிகம் ஒன்று திருமுறைகளிற் காணலாம்.

† எழுமனூர் ஸ்டேஷனுக்கு வடமேற்கே 1½ மைலில் அகண்டகாவேரித் துறைக்குச் சமீபத்திலுள்ளது.

‡ திருவானைக்காவலிலிருந்து வடமேற்கே 7 மைலிலுள்ள மண்ணச்ச நல்லூரினின்று மேற்கே 1½ மைலில் திருப்பைஞ்ஞீலி காணப்படும்.

$ கோடல் கோங்கம் புறவணி முல்லைமேல்
பாடல் வண்டிசை கேட்கும்பைஞ் ஞீலியார்
பேடு மாணும் பிறரறியாத தோர்
ஆடு நாக மசைத்த வடிகளே
—திருப்பைஞ்ஞீலி-திருக்குறுந்தொகை 8.

¶ மட்டு வார்குழ லாளொடு மால்விடை
இட்ட மாவுகந் தேறுமி றைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னரு ளேசெயும்
சிட்டர் போலுஞ்சி ராப்பள்ளிச் செல்வரே
—திருச்சிராப்பள்ளி-திருக்குறுந்தொகை 1.

தொகை முதற்பாசுரத்தில் உருவகப்படுத்தின ரென்பதும் பொருந்தும். இதன்றியும் திருவெறும்பியூர் ஸ்தலத்தில் இவர் எழுந்தருளிய ஞான்று மழைபொழிந்திருக்கு மென்பதும் பொருந்தச் சில பதிகங்களும், * மழைக்குப்பின்னர் ஆற்றுவெள்ளம் வடியும்போது காணக்கூடிய காட்சிகள் † திருப்பாய்ந்துறைப் பாசுரங்களிலும், அவ்வியற்கைத் தோற்றத்தால் அப்பர் மனத்தில் எழுப்பப்படும் தத்துவ ஆராய்ச்சி இலக்கணங்கள் திருக்கற்குடி ‡ திருப்பதிகங்களிலும் காணலாம். திருப்பராய்த்துறையைத் தரிசிக்க இவர் திருப்புறம்பயத்தில் வந்தபோதே நேர்ந்ததென்பது அவ்வூர் பதிகத்திலும் காணலாம். $

திருப்பைஞ்ஞீலி* யென்னும் அன்னம் சேர் †வயல் சூழ்ந்த அழகிய திருப்பதியைச்சேர்ந்து அதிலுள்ள சிவபெருமானைக் கண்டுகளிக்கக் காவிரிநதியைக் கடந்து அப்பர் செல்வாராயினர். போகும்போது ‡ வேனிலில் கடிய தாகமும் பசியும் மேலிட்டன. இதுகண்டு, எம்பெருமானுர் இவர் முன் வழியில் ஒரு குளமும் சோலையும் உண்டாக்கித்தான்ஒருபிராமணராய்க் கட்டுசோறு எடுத்துக்கொண்டு அப்பருக்கு எதிராக உட்கார்ந்தார். அப்பரும் அவ்விடம்நெருங்கினுர். அப்பரை நோக்கி அப்பிராமணர் "ஐயா என்னிடம் கட்டுசோறு இருக்கிறது. இதை உண்டு நீரைக் குடித்து இளைப்பாறு" மென்றனர். அங்ஙனம் இளைப்பாறி "நீர் எவ்விடம் போகின்றீ"ரென, அவ்விப்பிரரும் தானும் திருப்பைஞ்ஞீலிக்குப் போவதாய்ச் சொல்ல, இருவரும் அந்நகருக்குச் சென்றனர். இத்தலத்தை யடைந்தவுடன் இம்மாயவிப்பிரர் மறைந்தனர். இச் சதுரரை $ அடைந்து ¶ தான் அவலம்தீர்ந்தது நமக்குக் கிடைத்த ஓரே பதிகமாகிய திருக்குறுந்தொகை முதற்பாசுரத்தில் குறிப்பிட்டதுபோல் காணப்படுகின்றது. *பல பதிகங்கள் இத்திருப்பதியில் அப்பர் பாடினரெனச் சேக்கிழார் கூறினும் தற்காலத்தில் ஏனைய திருப்பதிகங்கள் மறைந்தன.

இப்பதியில் நடந்த அற்புதம் கேட்டோ, அல்லது எக்காரணத்தாலேயோ, திருஞானசம்பந்தர் சமணரை மதுரையில் அழித்து மீண்டகாலை, † இந்நகருக்கு எழுந்தருளித் தாமும் பதிகங்கள் பாடினுர். அவற்றுள் அப்பர் திருக்குறுந்தொகையிற் கண்ட விஷயங்களும் பெரும்பாலும் அச்சொற்றொடர்களுமே யமைந்திருப்பதால், அப்பர் திருப்பதிகம் சம்பந்தர் நினைவிலிருந்திருக்கு மென்று ‡ நாம் எண்ண வேண்டிய தாயிருக்கிறது.

* கார்முகிலாய்ப் பொழிவானைப் பொழிந்த முன்னீர்
 கரப்பானைக் கடியநடை விடையொன் றேறி
ஊர்பலவும் திரிவானை யூர தாக
 வொற்றியூ ருடையானை முற்று மாண்டு
பேரெழுத்தொன் றுடையானைப் பிரமனோடு
 மாலவனு மிந்திரனு மந்திரத்தா லேத்தும்
சீரெறும்பி யூர்மலைமேன் மாணிக் கத்தைச்
 செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றே னுனே.
 திருவெறும்பியூர்—திருத்தாண்டாம் 6.
பகழிபொழிந் தடலரக்கர் புரங்கண் மூன்றும்
 பாழ்படுத்த பரஞ்சுடரைப் பரிந்து தன்னைப்
புகழுமன்பர்க் கின்பமரு மமுதைத் தேனைப்
 புண்ணியனைப் புவனியது முழுதும் போத
உமிழுமம்பொற் குன்றத்தை முத்தின் றானை
 யுமையவடம் பெருமானை யிமையோ ரேத்தும்
திகழெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
 செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றே னுனே.
 திருவெறும்பியூர்—திருத்தாண்டகம் 4.

† எட்ட விட்ட விடுமண லெக்கர்மேல்
 பட்ட நுண்டுளி பாயும்ப ராய்த்துறைச்
 சிட்டன் சேவடி சென்றடை கிற்றிரோல்
 விட்டு நம்வினை யுள்ளன வீடுமே
 திருப்பாய்த்துறை-திருக்குறுந்தொகை. 8.

‡ திரும்புறம்பயம்-திருத்தாண்டகம். 6

$ "மண்ணதனி லைந்தை மாநீரி னுன்கை
 வயங்கெரியின் மூன்றைமா ருதத்தி ரண்டை
விண்ணதனி லொன்றை விரிகதிரைத்
 தண்மதியைத் தாரகைக டம்மின் மிக்க
எண்ணதனி லெழுத்தை ஏழிசையைக் காம
 னெழிலழிய வெரியுமிழ்ந்த யிமையா னேற்றிக்
கண்ணவனைக் கயற்குடியில் விழும் யானைக்
 கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னுனே.
 —திருக்கற்குடி-திருத்தாண்டகம் 3.

* இத்தலம் மூவராலும் பாடல்பெற்றது.

† சுந்தரர் பதிகம் 11-வது பாசுரம் (திருப்பைஞ்ஞீலி) காண்க.

‡ வேழத் தின்னுரி போர்த்த விகிர்தனுர்
 தாழச் செஞ்சடை மேற்பிறை வைத்தவர்
 தாழைத் தண்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
 யாழின் பாட்டையு கந்த வடிகளே
 —திருக்குறுந்தொகை 6.

$ உடையர் கோவண மொன்றுங் குறைவிலர்
 படைகொள் பாரிடம் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
 சடையிற் கங்கை தரித்த சதுரரை
 அடைய வல்லவர்க் கில்லை யவலமே.
 —திருக்குறுந்தொகை 1

¶ தக்கை தண்ணுமை தாளம்வீணை தகுணிச்சங்கிணிசல்லரி
கொக்க ரைகுட முழவி னோடிசைகூடப் பாடிநின்றாடுவீர்!
பக்கமே குயில் பாடுஞ் சோலைப்பைஞ் ஞீலியே னென்று [நிற்றிரால்
அக்கு மாமையும் பூண்டி ரோசொலு மாரணீய விடங்கரே
 —சுந்தரர் 9.

* காரு லாமலர்க் கொன்றைபந் தாரினுன்
 வாரு லாமுலை மங்கையொர் பங்கினன்
 தேருலாம் பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியெம்
 ஆர்கி லாவமு தையடைந் துய்ம்மினே
 —9-வது பாசுரம்.

‡ பீலியார் பெருமையும் பிடகர் நூன்மையும்
 சாலியா தவர்களைச் சாதி யாதோர்
 கோலியா வருவரைக் கூட்டி யெய்தபைஞ்
 ஞீலியான் கழலடி நினைந்து வாழ்மினே
 —சம்பந்தர் 10

‡ இவ்விரண்டுபாசுரங்களின்சொற்றொடர்களைநோக்குக:—

(i) கோடல்கள் புறவணி கொல்லை முல்லைமேல்
 பாடல்வண் டிசைமுரல் பயில்பைஞ் ஞீலியார்
 பேடல ராணலர் பெண்ணு மல்லதோர்
 ஆடலை யுகந்தவெம் மடிக ளல்லரே
 சம்பந்தர்-4-ம் பாசரம்-திருப்பைஞ்ஞீலி

(ii) கோடல் கோங்கம் புறவணி முல்லைமேல்
 பாடல் வண்டிசை கேட்கும்பைஞ் ஞீலியார்
 பேடு மாணும் பிறரறி யாததோர்
 ஆடு நாக மசைத்த வடிகளே
அப்பர் திருப்பைஞ்ஞீலி, திருக்குறுந்தொகை 8-ம் பாசுரம்.

ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras]

2. மர்க்கட நாடகம்

225 பக்கத் தொடர்ச்சி

புஜங்கன் போனபின் பஞ்சரவல்லி சினத்தினுல் அவனை நிந்தித்துரைத்த சில சொற்களை எண்ணித் தன்னையே சிறிது நொந்து கொண்டாள். புஜங்கன் சொன்னதெல்லாம் ஒருபுறமிருக்க, வாசவன் தன் தந்தையினது நிழலிற்கும் ஒருதீது செய்வான் என்று அவள்நம்பவில்லை. ஆனுல்அரசற்கும் அவனருமகற்கும் புஜங்கனுல் விபத்து ஏதேனும் விளைவது கூடுமென்னும் அச்சம் அவளுக்கு அதிகமாயது. ஆதலால், அரைக்கணம் தாழாது தான் சிறைவிட்டுக் கழன்று அவ்விருவரையும் அவர் பொருட்டே காத்தல் கடனென நினைத்தாள். இரண்டொரு நாட்களில் உள்ளத்திலொரு ஊக்கம் பிறக்க முகவாட்டமும் சிறிதளவு மாறியது. அன்றுமுதல் இவளுக்கு உண்டியும் ஆடையும்கொண்டுவரும் தாதியர்சிலதியர் முதலாயினேரொடு வெளிப்புறம் நிகழும் விடயங்களைக் கேட்டுப் பேசத் தலைப்பட்டாள். அவர் உரைத்ததெதுவும் இவள் கருத்திற்குப் பயன்பட்டதாக இல்லை. எனினும் சில தினங்கள் சென்றபின் புஜங்கன் அந்நகரத்தினின்று அகன்றுளன் என்பது இவளுக்குத் தெரியவரலாயிற்று. அவன் சென்ற இடமேனும் கருமமேனும் சிலதியர் அறிந்திலர். எதுவாயினும், பஞ்சரவல்லி சிறையிருந்து தப்புவதற்கு இதுவே தக்க சமயம் எனத் தேர்ந்தாள். தேர்ந்தநாள் முதல் ஒவ்வொரு வேளையும் கதவு திறக்கும்போதெல்லாம் தன்னைச் சிறைகாத்த காவலாளருடன் வார்த்தையாடும் வழக்கம் வைத்துக்கொள்ள ஆரம்பித்தனள். இதனுல், அறையின் படியில் நின்றே அவர்களுடன் உலகப்போக்காய் உரையாடுவது இயல்பாயிற்று. அவர்களும் முதலில், "அம்மே, ஓரடி உட்புறமே இரு. வெளியிலே கால்வைத்து எம்தலையைத் தரையில் இடறிவிடாதே" என்று சிரித்தனராய் வெருவினரேனும், மெள்ளமெள்ள அவளது முகத்தின் பொலிவிற்கும் மொழியின் இனிமைக்கும் வயமாயினர். அவர்தம் மனைவியர் குணங்களைக் கேட்டிவள் மகிழ்வாள். மக்களின் விளையாட்டைக் கேட்டிவள் நகைப்பாள். போரில் அவர்புரிந்த வீரச் செயல்களைக் கேட்டுப் பெரிதும் வியப்பாள். வரிசிலை முதலிய போர்க்கலை நுட்பங்களை ஆராய்ந்து ஓதுவாள். இவ்வண்ணம் இவள் உறவாட அவ்வீரர்தம் மனம்கனிந்து இளகியது. இளகிய அம்மனத்தில் இப்பாவையின் படிவமும் பேச்சும் பதிந்துவிட்டன. இனி இவளைக் காணுப் பொழுதெல்லாம் வீணுய்ப்போயிற்றென்று எண்ணலாயினர். குலதெய்வம் இவளென்னக் காணுந்தோறும் கும்பிடுவர். கடைநாள் புஜங்கனெடு இகலியிவள் பதருமொழியால் போர்க்கழைத்த வீரநிலை அவர் பார்வையைவிட்டு அகன்றதில்லை. எனின், இத்தகைய மங்கையைப் பெற்ற பாக்கியம் உணராமல் அவளோடு பகைபாராட்டும் இயற்கையற்றதந்தைபால் இவர்களுக்கு வெறுப்புண்டாயது. தப்பத்தானிவளை விட்டுவிடுவதனிலும் தருமம் பிறிது இல்லையென்று தனித்தனி எண்ணினர். ஆயின் மற்றவன் தகைவனே எனும் பயத்தினுல் இருவரும் தம் கருத்தைத் தெரிவித்திலர். அவ்வாறிருக்கப் பஞ்ரவல்லி ஒருநாள் முன்னினும் மிகுந்தபடி உறவுகாட்டி "உத்தம வீரர்காள், நும் தலைக்கொரு தீதுற நான் தரியேன். எனினும் நம்மிறைவன் சிங்கமுகன் இக்காலம் பெரியதோர் ஆபத்திற்கு ஆளாகி இருக்கின்றுன். அன்னவனைக் காக்கவல்லவள் நானொருத்தியே. இவ்வகையில் உம்முதவி வேண்டுகின்றேன், புரிவிரோ?" என்றனள். அதுகேட்டு ஒருவன், "அம்ம, எம் தலை கிடக்கட்டும், அரசனும் கிடக்கட்டும், நின்பொருட்டே சிறைவிட்டு அகல்வது உன்சித்தமாயின் நின்னைத் தடுக்கப்புகோம், இன்றே ஏகுவாய்," என, மற்றவன், "புஜங்கனது ஆணைக்கு அடங்கிய அடியேம் அவன் விதித்த காவலைக் கடக்கவிடுவது ஊழியம்பிழைத்த குற்றமாகுமே என்னுமொரு நினைவுஎன்மனத்தில் உறுத்துகின்றது" என்றுரைக்க, முன்னவன், "ஆணை தந்தவன் புஜங்கனேயாயினும் நமக்கு அன்னமளிப்பவன் அரசனுவான். அரசனுக்குறும் இடையூற்றைத் தடுப்பதன்றோ நம் முதற்கடன்" என மீண்டும் செப்பினன். அவ்வளவில் இருவரும், "அரசனைக் காப்பதாயின் எம் தலையையே கொடுத்துதவ ஒவ்வினேம். இனித் தாழ்தலின்றித் திருவே யனையாய், செல்க," என்றனர். பஞ்சரவல்லியும் வியந்த நெஞ்சினளாய், "நீவிரும், தோழர்காள், புஜங்கன் வருமுன் இத்தேயத்தைவிட்டுப் போய்விடுங்கள். மனைவி மக்களையும் அழைத்துக்கொண்டு அவன் கைக்கு எட்டாவகை மறைந்தகல்மின்," எனக் கூறித் தன் கழுத்திலிருந்த இரத்தினமணி மாலையை எடுத்து, "இதையும் நும் வழிச்செலவிற்கு வைத்துக் கொள்ளுங்கள்;" என்று நீட்டினுள். நீட்டிய நிதியை அவர்கைம்மறித்து "அம்மே, வேண்டோம். நீ கொடுக்குமிது நன்கொடையேயாயினும் பாவியேம் பெற்றுல் கைக்கூலியே யாகும். நல்லது செய்தோம் எனும் மனமே தனமாக நெடுந்தூரம் நடக்க வல்லோம்." எனத் தொழுதுபோயினுர். வலை பீறிப் பாய்ந்தோடும் மானெனப் பஞ்சரவல்லியும் சிறைசூழ்ந்த நாற்சுவரும் பின்னுக, அன்பனையும் அன்னையையும் நண்ணும் அவாத் தூண்டிய தன்மனமும் முன்னுகக் காற்றிலே ஊர்ந்து கடிதின் ஏகினுள்.

ஏகிய மகளும் முதலில் எய்தியது அவளன்னைவாழ் நன்மனையே யாகும். எய்திய புதல்வியை எடுத்தணைத்து அசோகவதி கண்கலச நீராட்டிப், "பஞ்சரா, ஈன்றேனைப் பிரிந்து நீ சிறைதனில் தனியே வதிந்தபோது என் நினைத்தாய், என் செய்தாய்! சிறகரிந்த பைங்கிளி போல் செல்வி, சிறையுள் சோர்ந்தனையோ! தாதை வருத்தகொடுமையைத்தான் விலக்குதற்காற்றுஎன்னை இகழ்ந்தனையோ! பயந்த என் பாழ்வயிற்றைப் பழித்தனையோ!" என்று விம்மினுள். அழுமவள் கண்களைப் பஞ்சரவல்லி தன் முன்தானையால் துடைத்து, "அன்னுய் அழேல். திப்பியத்தாயே நின்னைப் பழிப்பதும் இகழ்வதும் பஞ்சரவல்லியோ! அகங்கரைந்து கண் கலுழேல். அம்மா, மேற்செய வேண்டிய காரியம் சிலவுள. என்னப்பன் ஹிரண்யன் எங்குப்போயுளான், அறிதியோ?" எனக் கரும்மே கண்ணுய் வினவினள்.

“பஞ்சரா, பெண்ணே உன் தந்தையை நீ இரணியனென்று செப்பினுல் என் நெஞ்சம் நடுங்குகின்றதம்மா! வைவதும் நாமேயானுல் அவற்கு உற்றவர் பின் யாவரே யாவர்?”

“அஞ்சேல் அம்ம, கற்றூண் பிளப்பதும் இக்கலிகாலத்தி லில்லை. மற்று, எந்தை போயுள இடமும் கருமமும் நீயறிந்துளாயாயின் என்வயின் இயம்புதி. இவ்வாணுசுரன் சென்றுள காரியத்தை யான் இன்றே அறிவது இன்றியமையாதது.”

“பின்னும் பார், பெண்ணே! ஏனடீ, ஏனடீ, இங்கித வகையே வழங்குகின்றாய்! நின் தாயின் மனம் நோகப் பழகுவது அழகிதோ பெண்ணே! தீமையே செய்திடினும் என் தெய்வத்தை இகழ்வாரைத் தரியேன்.”

“அம்மா, சிறுமதிச் சிறுமிநான் புகன்றஉரை பொறுத்தருள். ஆருயிரன்னாய், என் செய்வேன், நான் படும்பாடே!......” எனப் பஞ்சரவல்லி அழுவதாயினாள். தாயும் பெண்ணும் மாறிமாறியும் ஒன்றுசேர்ந்தும்கண்ணீர் வடிக்கச் சிலநேரம் கழிந்தது. பிறகு இருவரும் ஒரு வண்ணம் துயரநீங்கிச் சிற்சில பேசினர். புஜங்கன் போனவிதம் அறிந்திலள், எனக் கூறினாள் அசோகவதி. சிறையகன்று போந்த விதந்தனைப் பஞ்சரவல்லி செப்பினாள். தெய்வமிவன் என்று இன்னும் கருதிய தன் தாய், கேட்க வருந்துவள் என்பதையுன்னிப் புஜங்கன் சிறைபுட்போந்து சொன்னது செய்தது யாதும் பஞ்சரவல்லி அசோகவதிக்கு அறிவித்திலள். இடைக்கிடையே தன்மகள் கேட்கப் புகுந்துபுகுந்து நாணத்தால் அடங்குவதை அசோகவதி ஓர்ந்து, “பஞ்சரா, நின் வாசவனை யான் கண்டு வெகுகால மாயிற்று. இவ்வீதிவாய் அவன் போவதுமில்லை. நகரில்தான் உளனோ இல்லனோ என்பதும் அறிந்திலேன்,” என நவின்றனள். இவ்வுரை கேட்டவுடன் உட்புகுந்த ஐயத்தால் மாறிய தன் முகக்குறியை அன்னை நோக்காவண்ணம் பஞ்சரவல்லி பொள்ளென வெழுந்துபோயினள். ‘புஜங்கன் வினையிலே வாசவனுக்கும் உடன்பாடு உண்டோதான்?” என்னுமித்தியக்கம், அவளுக்குத் தோன்றியபோதே மறைந்ததாயினும் அச்சமோ சிறிது விஞ்சியே நின்றது.

தேடித்தேடி வாசவனைப் பார்ப்பதில் பஞ்சரவல்லிக்குப் பல நாட்கள் கழிந்தன. அவன் வழக்கமாய்ச் சென்றிடும் நந்தனவனங்களுக்கும் மாளிகை மண்டபங்களுக்கும் நாட்டிய அரங்கினிற்கும் மற்ற இடங்களுக்கும், காலை பகல் மாலை முப்பொழுதிலும் போய் இவள் புகுவோர் ஏகுவோரைக் கருதி நோக்குவாள். ஆங்காங்கிருந்த காளையராயினோர் இவளைப் பார்த்து இளைக்க நேர்ந்ததேயன்றி இவளது கண்நிறைய வாசவன் எதிர்ந்து தோன்றிலன். ஆதலால்,புஜங்கனுடன் இவனும் போயுளானோ என்னுமிந்த ஐயம் உருவிய சிந்தையினளாய் நாடோறும் வீடுவந்து சேருவாள். அல்லலுற்ற அகத்தினர் என்றும் இல்லினுற் றிருக்கவோ தரித்திடார். கால்கள் கொண்டுபோகு மிடம் அவர் குறிப்பின்றித் திரிதலும் இயல்பே. இந்நிலையினோர் சாருமிடங்களும், கடற்கரை குளத்துறை ஆற்றினோரம் மலர்வனம் முதலியனவாகும்.

அளவிலா வளமெலாம் ஏமாங்கதத்திற்கு நல்கும் அச்சரயுநதியின் கரையைத் தொடர்ந்து ஒருநாள் பிற்பகல் பஞ்சரவல்லி நடப்பவளாகி நகரினெல்லைக்கு மப்புறம்போயினாள். காதலனைக் காணாது இக்காரிகை உற்றதுயரிற்குச் சகியாது வயிறெற்றிப் புரள்வது போல் அவ்வாறு அலையெறிந்து சுழித்தோடியது. அந்நதியின் ஆழத்தினும் ஆழ்ந்த சிந்தனையளாய் இந்நங்கை இருந்தாளெனினும் ஆங்காங்கு இவள் கண்களிற்பட்ட காட்சிகளை வியந்து நிற்பதும் பின் நடப்பதுமாய்ப் படர்தலுற்றாள். தவவடிவாய்த் தியானநிலையில் மீனையே நினைத்து ஒருகாலில் நின்ற நாரைகளைப் பார்த்திவள் சற்றுத் தாழ்வாள். செடிக்குச்செடி நுண்ணியநூல் தொடுத்துச் சூரிய கிரணத்தில் பலநிறம் காட்டும் பெருவலை பின்னி அதன்நடுவே வருவிருந்து பார்த்திருக்கும் எண்கால் சிலந்திகளைக் கண்ணுற்றுச் சிறிதுபோழ்து தங்குவாள். நன்கனி தமக்கு நல்கிய தருக்களைக்கும்பிடுவனபோல் முன்கையில்பற்றிக் கோதிக்கோதிப் பழங்கள் தின்றிடும் அணில்தமை நோக்கி அயல் நிற்பாள். நிலமகள் தனக்குத் தரளமாலை நிரைநிரை வேய்ந்துபொலம்செய் வண்ணமகளோதான் இப்புதுப்புனல் நதியே என்னும்படி கரையெலாம் நுரையொதுக்கும் அலைகளுள் அளைந்துசெல்வாள். கிளையிடை மறைந்து கூவிய குயிலின் இன்னிசை கேட்டு, “உருவிலா ஒலியே, உன் உள்ளத்து நிலவிய ஆனந்தப் பெருக்கு என்னே!” என ஒளவியம் கொள்வாள்.

இவ்வகை நங்கை காண்பன கண்டும், நினைப்பன நினைத்தும் திரிதரும் அளவில், இரவியும் மேற்கடல் சாயச்சாய அவள்முன் படர்ந்து தவழ்ந்த சாயையும் நீண்டு வளர்வதாயிற்று. “புஜங்கனது மனத்தில் இருட்டிய ஆசையேபோல் மண்மீது மேன்மேலும் வளர்ந்திடும் நிழலே, நீ போமளவு அளந்து பார்க்கின்றேன்,” என்று முயன்றனள் என்ன அவளது நிழலையே கருதி நடந்த பஞ்சரவல்லி, தனக்குப் பின்னிருந்து பிறிதொருநிழல் விரைந்திதைத் தொடர்ந்தாடி உறவு கொண்டாடக் கண்டாள். காண்டலும் புதியது புகுந்த இச்சாயைக் குரியபொருள் யாவதெனப் பின்திரும்புங்கால் அப்பரிதியின் கொழுந்தே போன்று இளவேந்தன் வாசவனே வருவது மாயினான். வந்தவன் வந்து வனிதையை எட்டவும் எட்டினான். ‘பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?” உயிரே போன்று இவர்தம் நிழல்களும் ஒன்றாயின. நூலிழையொன்று நுழைவதற் கியலாவகை உற்றுத் தழுவி எத்தனைநேரம் ஓவியச்செய்திபோல் நின்றனர் என்பது உரைத்தல் மிகை. காதலால் சேர்ந்த இச்செவ்வியோர்க்குப் புவிமடந்தை மங்கல ஆரத்தி எடுத்ததை நிகர்க்கச் செக்கர் ஒளிகதுவி யாற்றுநீரும் சிவந்து போயது. அச்சமயம் அருகிருந்த ஒரு மரத்தடி இறங்கி இவர்செயலை உற்று நோக்கிய இரு குரங்குகள் தாமும் ஒன்றையொன்று இறுகப்புல்லி நீண்ட முகத்தை முகத்தொடு தேய்த்துக் கொண்டன. இதைக் காணப் பஞ்சரவல்லி நாணத்தால் நகைத்துத் தன்னை அணைத்த காதலன் கைகளை நெகிழ்த்தினள். வாசவனும் இதனால் மயல் தெளிந்தனன். குரங்கின் கூத்து அவனையும் நகைக்கச் செய்தது. மனத்திலே எண்ணங்கள்பன்னூறுகிடக்க இருவருக்கும்வாயிலே ஒன்றும் உரைசெயத் தோன்றவில்லை. குரங்குகளோ இரண்டும் பேசிக்கொள்வனபோல் உதட்டை அசைத்தன. இதனையே ஆதாரமாகக்கொண்டு பஞ்சரவல்லி, “அன்ப, குரக்கின் பாஷை தெரிந்திருந்தால் அவைகளிடம் இருந்தேனும் இந்நிலையில் பேசலாவது இதுவெனக் கற்கலாம்,” என்று தொடங்க, வாசவன் “நின் தோள்களுக்கு உரிய மாதர் பிறர் பிறர், என்று

பெண்குரங்கு கடுவனுக்குக் கூறுவதை நீ கேட்கவில்லையோ!” என்று தாழைமடலில் அன்று அவள் வரைந்த வாசகத்தைச் சுட்டி அசதியாடினான்: அசடன் இவன் அதைத்தான் செப்பியிருக்கக் கூடாது. களிப்பின் மிகுதியால் ஓராது சில உரைத்துவிட்டுப் பின் மனம்வருந்துபவர் பலர். பெண்ணாய்ப் பிறந்தவள் எவளும் அவள்மொழிகளாலேயே மீண்டும் இடித்துரைக்கப் பொறாள். “என்னை நீ அணைந்திடேன் என்று முன் கூறியுளாய். மற்று அக்கொள்கையை இன்று மாற்றி ஆசைக்கே வசமாயினாய் அன்றோ!” எனும் அர்த்தம், வாசவன் வார்த்தையில் அடங்கியுளதென்று பஞ்சரவல்லி பாவித்தாள். அவளது எளிமையை வாசவன் எடுத்துக்காட்ட நினைத்திலனாலும் பஞ்சரவல்லி படுத்தியபொருளும் ஒரு சிறிது பொருந்துவதாகும். நிந்தனையில் சிறிது உண்மையும் கலந்திருக்குமாயின் அது தாக்கியவர்க்குக் கோபம் பின்னும் அதிகமாதல் இயல்பே. ஆதலால் பஞ்சரவல்லி, “கேட்டேன், பெரும, கேட்டேன். கடுவனும், ‘உன்மீது இருக்கும் வேட்கையால் என் தந்தையை நான் வாளுக்கு இரையாக்குவேன்!” என்று மந்திக்குச் சொல்வதை நீ கேளாதது என்னவோ!” எனச் சிறிது விலகிப்போயினாள். “நஞ்சுபெய் வாயள் நங்காய் நீ,” என வுரைத்து வாசவனும் முடிசாய்த்து நின்றனன். கூடத்தான் இனிப் பெறுவோமோவென இதுகாறும் ஏங்கியிருந்த இவர் கூடினவுடன் மனம் பிரிந்தனர். மேலொன்று உரைப்பதற்கு இருவர்க்கும் நாவெழவில்லை. அசதியாடி அனர்த்தம் விளைவித்த அன்பனது அசட்டுத்தனத்திற்குச் சிவந்த பானுவும் போய்விட்டான். படர்ந்துவந்த அந்தியும் இவர் நிலையைக்கண்டு அலர்தூற்றிச் சிறித்ததுநிகர்க்க மல்லியும் முல்லையும் வெண்மலர் அரும்பின. ஆகாயத்தில் உடுக்கள் ஒவ்வொன்றாய் இரண்டிரண்டாய் இவ்வதிசயத்தை எட்டியெட்டிப் பார்க்கலாயின. தென்றலிளங் காற்று இவர்மீது தேன்துளித்துத் தவழ்ந்துலவியது. அன்றிலோசை ஒன்றிரண்டு இவர் செவியுள் ஓடலாயிற்று. மதுவுண்டு பண்மிழற்றும் மென்சிறைய வண்டொலியும், மனைநாடும் மாட்டினது கழுத்தசையும் மணியொலியும், கொம்பினிடைக் கூண்டடைந்து குழுமியிடும் புள்ளொலியும் எம்மருங்கும் இனிமையுற அமைதிபெற ஒலித்தன. வாசவன் பஞ்சரவல்லி இருவரும் ஓராதுரைத்த சொற்களை நினைத்து நொந்தனர். பசியால் வாடிய ஒருஏழை முயன்றுபெற்ற சோற்றை உண்ணாது பாத்திரத்தோடு பந்துவிளையாடப் புகுந்து அது கைதவறி உடையுமானால் எவ்வகை மனம் புழுங்குவானோ அந்நிலையராயினர் இக்காதலர் இருவரும். வீணிலே வேறுபட்ட இவ்வூடலுக்கு முடிவுகாணும் வேட்கையராயினர். எனினும் யார் முதலில் பேசுவது! என்ன பேசுவது! பிள்ளையார் பிடிக்க இனியொருதரமும் குரங்காய் முடிந்தால் என்ன செய்வது! நாணத்தால் நாவிழுந்து நங்கையும் நம்பியும் நினைவுமாழ்கியஎல்லை, நாககன்னியர் எறிந்தநற் கந்துகம்போல் பூரணசந்திரன் கீழ்த்திசைஎழுந்தான். எழுந்தஇந்துவும் காதல்மீதூர நின்ற இவ்விருவர்மீது நிலவைச் சொரியச்சொரிய அன்னார் வாயில் உறுத்திய வெட்கம் அகன்றிடவும் மனத்தில்சுழன்ற வேட்கைக்கடலே பொங்கலாயிற்று. பெண்மகள் மெள்ள வாசவன்இருந்த திசையின்பால் கடைக்கண் போக்குவதும் அவன் இவள்பக்கம் பார்க்கும்போது இவள் திரும்பிவிடுவதுமாகிச் சிலநேரம் கண்களவு ஆடினர். கண்ணொடுகண் நோக்கியபின் வாய்ச்சொற்களும் தாமே வந்தன. “விபரீதம், விபரீதம்! மிருகேந்திரன் அங்குத் தன் உயிரையே இறுத்துக் கூட்டிவைத்த இருவரை இங்குப் புன்குரங்கு இரண்டு வந்து பிரித்துவிட்டவே, என்ன விபரீதம்!” என்று சொல்லிக்கொண்டே வாசவன்நடந்தேக எத்தனிக்குமளவில், கால்விரலினால் தரையில் கோலங்கள் கிழித்துஅதன்செம்மையைக் கருதிநின்றபஞ்சரவல்லி, “வானரத்தின் தலையிலே பழியைப் போட்டுவிட்டுப் பெண்ணொருத்தியை இரவென்றும் பாராது தனிவிட்டுப்போவதும் ஏமாங்கதத்திளவரசற்கு போதுமோ!” என்றனள். “தனிவிட்டுப் போக எண்ணினவன் ஆனால் இந்நேரம் காத்திருப்பானோ!” எனக் கூறினனாய் வாசவனும் நின்றனன். பேசியது இருவரும் படர்க்கையாலும் வெகுவிரைவினில் அருகு சார்ந்தனர். துனியும் தொலைந்தது. உரையாடி ஊரைநோக்கிப் புறப்பட்டனர். புன்குரங் கிவைபுகன்ற சொற்களின் பொருளைத் தெரிவிக்குமாறு இருவரும் மாறிவேண்ட, உள்ளத்தில் ஒன்றும் ஒளியாமல் அவரவர் அறிந்ததையும் நினைத்ததையும் இயம்பிவிடவே,மனம் சுமந்த பாரந்தீர்ந்து மேல் செய்வன கருதித் தெளிந்தனர். “காதல, இச்செய்தியை இனி நீ அரசனுக்குரையாது கரந்துவைப்பது அழகிதன்று. புஜங்கன் போயுள காரியம் நாமிருவரும் அறியோம். ஆயினும் அவன் கருத்தளவு ஐயமில்லை. சதிசூழும் அவன்நினைவை உன் கோத்தந்தை காலத்திலுணர்ந்தாலன்றித் தீமைவிளைந்தபின் தடுப்பது அரியதாகலாம். ஆதலால், இன்றே சென்று இதுஇது என்று ஒன்று விடாமல் வேந்தன்பால் புகன்றிடுதலே நன்று,” என்றனள் பஞ்சரவல்லி. வாசவனும் அதுவே தக்கதென்று நினைத்த மறுநிமிடமே தன் மனம் மாறி “என்ன, பஞ்சரா, என்னைச் சோதனை புரியவோ இப்படிச் செப்பினாய்! எந்தைசெவிக்கு இச்சதியோசனை எட்டியவுடன் புஜங்கன் மாய்ந்து போயினான். அன்னதன்பின் உன் தந்தையைச் சுட்டிய கையையும் நீ பற்றுதற்கு இயைவையோ! உன்னை நான் இதனால் இழந்திடும் வழியே வகுத்தாயன்றி வேறொன்றில்லை. ஆதலால், கூரிய நின் புத்தியில் பிறிதொரு உபாயம் தேடிப்பார்,” என விரைந்து சாற்றினான். உற்றது கூறினால் புஜங்கன் கெடுகின்றான், கூறாவிடில் அக்கேடு சிங்கமுகனைச் சேரும். மற்றித் தந்தையர் தலையோடு தம் காதலையும் போற்றும்வண்ணம் இம்மக்கள் அறிந்திலர். வழிதான் தெரிந்திலராயினும் அன்று கண்ட மர்க்கடநாடகத்தால் அவர் இருந்த நிலையேனும் நன்கறிய ஏது உண்டாயதை நினைத்துச் சந்தோஷமடைந்தனர். இப்படி இவர் குரங்கையும் தம்காதலையும் வேந்தனையும் பற்றிப் பேசிநடக்க அகநகரும் குறுகியது. இனி இவ சேர்ந்துசெல்வது தகுதியாகாதென்று உணர்ந்ததால் வெவ்வேறு வழியில்பிரிந்து அகல்வது அவசியமாயிற்று. அன்றுநேர்ந்த இடத்திலேயே மறுநாள் தலைப்படுவதென்று குறித்துக்கொண்டு பிரியும்போது வாசவன், “தாழ்வையோ மறப்பாயோ, மாறாது வருவாயோ பஞ்சரா, நாளைமாலை?” என்று பரிந்துஅவள் அருளை நோக்கப் பஞ்சரவல்லியும், “எனக்கு முன் சென்று அந்தக் கள்ளக் குரங்குகளையெல்லாம் ஓட்டிவைப்பதாக வாக்களிப்பாய் ஆயின் வருவேன், அல்லையெனில் இல்லை,” என நகையரும்பித் தன் மனையுப்க்கும் நெறியிற் போயினள்.

வில்லி பாரத விளக்கம்

ஆதிபருவம்

வேத்திரகீயச் சருக்கம்

தனிவன மிகந்துநீர் சாலி கோத்திர
முனிவனஞ் சிலபகல் வைகி முந்துற
மனனுறப் பார்ப்பன மாக்க ளாகியே
யினிமையின் வேத்திர கீய மெய்துவீர்.

228 பக்கத் தொடர்ச்சி

இவ்வாறு குந்தியும் பாண்டவர்களும் வனத்தில் வசிக்கும்நாளில், அவர்களுடைய துன்பத்தை நீக்கும்பொருட்டு அங்கே வியாசமுனிவர் எழுந்தருளி, "மக்களியக்கமில்லாத இந்தக் காட்டை நீங்கி, நீங்கள் சாலிகோத்திர முனிவனத்தில் சிலநாள் தங்கிப் பின் மனம்பொருந்த பார்ப்பன மக்களாகி வேத்திரகீயம்போய்ச்சேருங்கள்'' என்றுகட்டளையிட்டார். அவர்களும் அவ்வாறே அவர்மொழியைத் தலைமேற்கொண்டு, மறைதெரி யந்தணர்தன்மையில் வடிவம் மாறிக் கோத்திரம் சூத்திரங் குடியுரைத்து வேத்திரகீய மாநகர் வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்தில், விருந்தினரை உபசரித்தளிக்கும் உண்மையன்பினர், ஆதிதேயரென்பவர் அவர்களை யணுகி, அவர்களுக்கு முகமன்கூறி வரவழைத்து, அரசமாளிகை யென்னத் தக்கதோர் மனையில் அவர்களைக் கொண்டு சேர்த்தார். பொன்னகர்போன்ற வந்நகரில் பாண்டவர்களும்அவர் அன்னையும் அநேக நாள் தங்கியிருந்தனர்.

இப்படி அரசகுலத்தவர் வடிவம் மாறி அந்தணருடன் சேர்ந்து வாழ்ந்தார் என்னும் கூற்று இக்காலத்திய இந்தியருக்குப் பெரும் வியப்பைத் தரத்தக்கதாயிருக்கின்றது. ஆயினும் நாம் மகாபாரதக் கதையின் காலத்தை உற்று நோக்கினால் அது வியப்பைத் தரவேண்டியதில்லை யென்பது நன்கு புலப்படும்.

மகா பாரதத்தின் காலம் இன்னதென்று நிர்ணயிப்பது எளிதன்று. பலர் பலபட அதன் காலத்தை வரையறுத்துக் கூறியிருக்கின்றார்கள். டாக்டர் பூலர் என்பவர், பாரதத்தின் விஷயம் முதன்முதலில் நமக்குத் தெரியவந்தது கி. பி. ஐந்தாம் நூற்றுண்டென்றாலும், அது கி. பி. முதலாம் நூற்றுண்டிலேயே பரவியிருந்ததெனக் கொள்ளலாம் என்று அபிப்பிராயப்படுகிறார். மஹாபாரத்தைப்பற்றிய குறிப்பு பதஞ்சலி எழுதிய மஹா பாஷியத்தில் காணப்படுகிறபடியாலும், பதஞ்சலியிருந்தது கி. பி. இரண்டாம் நூற்றுண்டானபடியாலும் அதற்கு முற்பட்ட காலமாகிய கி. பி. முதல்நூற்றுண்டே சரியென்று சிலர் எண்ணுகிறார்கள். கிரிடி என்பவர் புஷ்யமித்திரன் என்னும் அரசன், மௌரிய அரசர்களில் கடையோனை பிருஹத்திராதன் என்பவனை வென்றபின், புத்தமதம் குன்றிவிட்ட தென்றும், அச்சமயத்தில்தான் பிராம்மணர்கள் தங்கள் சைவ வைணவ ஆகமங்களைத் திரட்டினார்களென்றும், புஷ்யமித்திரன் காலம் இரண்டாம் நூற்றுண்டானபடியால் மகா பாரதமும் கி. பி. இரண்டாம் நூற்றுண்டிலேயே எழுதப்பட்டிருக்க வேண்டுமென்றும் எண்ணுகிறார்.

மக்டோனல்ட என்னும் பண்டிதர் எழுதிய 'வடமொழியின் வரலாறு' என்னும் நூலில் அவர் கொள்ளும் எண்ணமே ஏற்றதென்று சேஷஐயங்கார் என்னும் பண்டிதர் அபிப்பிராயப்படுகிறார். அவர் சொல்வதின்படி மகாபாரதக்கதை கர்ணபரம்பரையில்சுமார் 3000 வருடங்களுக்கு முற்பட்டே பரவியிருந்ததென்றும், ஆனால் அது எழுதப்பட்டது கி. மு. 5-ம் நூற்றுண்டு, அதாவது சுமார் 2400 வருடங்களுக்கு முன் என்றும், கி. மு. 3-ம் நூற்றுண்டில் அதாவது சுமார் 2200 வருடங்களுக்குமுன் அந்நூல் 20000 சுலோகங்களை மட்டும் கொண்ட நூலாயிருந்ததென்றும், கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் அதாவது 1400 வருடங்களுக்குமுன் அது ஒருலக்ஷம் சுலோகங்கள் கொண்ட நூலாய்ப் பெருகிவிட்டதென்றும் தெரிவிக்கிறார். இரண்டாயிரத்து நானூறு வருடங்களுக்கு முன் ஏற்பட்ட நூலாயிருக்குமானால் அச்சமயம் ஜாதிபேதம் இருந்திருக்க இடமில்லை. சரித்திரக்காரர்கள் சொல்வது உண்மையானல் முதன்முதலில் ஆரியர்கள் குடியேறினகாலத்தில் அவர்களுக்குள்ஜாதிகள் கிடையாது. பின்தொழில்முறையைநோக்கிப் பிரித்து ஏற்படுத்திய பாகுபாட்டின்படி அவரவர்கள் தங்கள் தங்கள் தொழில்களைச் செய்துவந்தனரேனும், எக்காலத்திலும் அவர்கள் ஒருதொழிலைவிட்டு வேறு தொழிலுக்குப் போய்விடுவதும் அதனால் வருணங்கள் மாறுவதும் வழக்கமாயிருந்தது. அவர்கள் யாவரும் ஆரியரேயானபடியால் அதில் ஒருவித வேற்றுமையும் ஏற்படவில்லை. பிறப்பினால் ஜாதிவித்தியாசம் ஏற்பட்டது பிற்காலத்தில் தோன்றிய சமூக சம்பந்தமான ஒருகொடிய வழக்கம். ஆரியர் சிந்துநதி பாயப்பெற்ற நாடுகளில் குடியேறினபின், ஏற்கனவே அவ்வூர்களி லிருந்தவர்களோடு பழகி ஆரிய ஆடவர்கள் அந்நாட்டுப் பெண்களை மணந்தும், ஆரியப் பெண்கள் அவ்வூர் ஆடவர்களைக் கலியாணஞ் செய்துகொண்டும் வருணக்கலப்பு உண்டாகிவிடவே, மனுபோன்ற சிலர் தங்கள்குலத்தைப் புனிதமாக்க வேண்டுமென்று சில சட்டதிட்டங்களை ஏற்படுத்தினார்கள். இது போலவேதான் தற்சமயம் ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும், வெள்ளைக்காரர்களுக்கும் கருநிறமுள்ள மற்றெல்லா வகுப்பார்க்கும் ஒருவித சச்சரவு நடந்து வருகிறது. நாம்,வெள்ளையர் செய்வது அடாதென்று கோபங்கொண்டு அவர்களைக் குறைகூறினால், அவர்கள் உங்கள் கண்களிலுள்ள துரும்பை முதலில் எடுத்துவிட்டு எங்கள் கண்களிலுள்ள தூசை எடுக்கப் பிரயத்தனப்படுங்கள் என்று சொல்லுகிறார்கள்.

பாண்டவர் தங்கிய வீட்டின் மனைக்கிழத்தி ஒருநாள் ஓலமிட் டலறக்கண்ட குந்தி, அவளை 'யாது காரணத்தால் இன்னற்படுகின்றாய்' என்று வினவ, அவளும், பகாசுரனுடைய வரலாற்றைக் கூறினாள். முப்பத்தெட்டுமுதல் ஐம்பது செய்யுட்கள்வரையில் பகன் வரலாறும், குந்தி தன் மைந்தனைப் பலியாக அனுப்பச் சொன்னதும், வீமன் தன்னை யலங்காரம் செய்துகொண்டதும் சொல்லப்படுகின்றன. இப்பாடல்கள் குறுஞ்சீர் வண்ணமாய்ப் பெரும்பாலும் குற்றெழுத்துக்கள் பயின்றிருக்கின்றன. சந்தவழகுக்காக ஒரு செய்யுளை எடுத்துக் கூறுவோம்.

ஒன்று படவெதிர் கொன்று பலருயி
ருண்ப தறநெறி யன்றுநீ
யின்று முதலினி யென்று முறைமுறை
யெங்கண் மனைதொறும் விஞ்சையோர்
குன்ற மெனவொரு பண்டி யறுசுவை
கொண்ட வடிசிலு நங்குலந்
துன்று நரபலி யொன்று மிவைதிறை
தொண்டு புரிகுவ மென்றலும்

[பகனுக்கு அவ்வூரார் சொன்னதாவது, நீ எதிர்ப்பட்டவர்களையெல்லாம் வென்று பலருயிரைக் கொல்வது நீதியன்று இன்று முதல் நாங்கள் முறைவகுத்து ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொருவராய்க், குன்றைப்போல் குவித்த அடிசில் ஒருவண்டியும், அறுசுவைப் பண்டங்களும் ஒரு நரபலியும், உனக்குத் திறையாய்க்கொணர்ந்துகொடுப்போம்] ஆகையால் எங்களை மிகைபடக் கொல்வதை யொழியென் றிரந்தார்கள். பகனுக் கனுப்பவேண்டிய அன்னத்தை யெடுத்துச்செல்ல வீமன்தன்னை யலங்கரித்துக் கொண்டானென்பதைச் சொல்லுமிடத்து அதே சந்தத்தில் யகரவெழுத்தைச் சேர்த்து எழுதியிருக்கும் பாடலும் கவனிக்கத் தகுந்ததே.

வைய முழுதுடை பைய னிளவலும்
வைக லுடன்மனை வைகுவோ
ருய்யும் வகைபுக லையை யுரையினை
யொய்யென் விரைவொடு கைகொளா
வெய்ய பகனுடல் பெய்த குருதியின்
மெய்யை யெழிலணி செய்தனன்
செய்ய மலர்கொடு செய்ய துகில்கொடு
செய்ய கலவையின் மொய்கொடே

[உலகமுழுவதும் ஆளத்தகுந்தவனுடைய தம்பியும், காலையில் வீட்டில் இருப்போர்களெல்லாம் பிழைக்கும் படியாகத் தாய் சொன்ன வுரையினை வெகுவிரைவில் கைக்கொண்டவனாய், வெம்மை பொருந்தியவனான பகனுடலிலிருந்து பொழியப்போகும் இரத்தத்தையொப்பத் தன்னுடம்பைச் சிவந்த மலர்களாலும், சிவந்த ஆடையாலும் சிவந்த கலவைச் செறிவினாலும் அலங்காரஞ் செய்தான்]

பெய்தகுருதி யென்று இறந்தகாலத்தாற் சொன்னது தெளிவுபற்றி வந்த காலவழுவமைதி. 'எறும்பு முட்டைகொண்டு திட்டை ஏறின் மழைபெய்தது' என்பது போலாம்.

வீமன் செல்லக் காலதாமத மாய்விட்டபடியால் இவன் வருகையை நோக்கி வெகு வெகுளியோடு பகன் நான்கு திக்குக்களையும் நோக்கிநோக்கி 'மனம் வேவ வேவ' நெடுமூச் செறிந்தவனாய் நின்றுகொண்டிருந்தான். இவன் அவ்வாறு நிற்பதைத் தெரிவிக்கும் பாடல் மிகவும் பொருத்தமுடையதாய்ப் பாடப்பட்டிருக்கிறது. சந்தவேறுபாடும் நோக்கத் தகுந்தது.

வெற்றெலும்பினுய ராசனந்தனில்
விகங்கநீழலிடை மேவரச்
சுற்றுநின்றுபல சம்புகங்கடுதி
சொல்லவல்லன்மிகு துன்முக
னுற்றுநின்றநிலை கண்டுகந்திவனை
யுயிரொழிந்திட வுடற்றினு
லிற்றையுண்டிகெடு மென்றுபண்டியி
லெடுத்தவல்சிநுக ரிச்சையான்

தான்தின்று எறிந்த மானுடருடைய தசையில்லா எலும்புக்குவியலே உயர்ந்த சிங்காதனமாக அதிலமர்ந்து, தானுண்டெறியும்தசைமுதலியவற்றைத் தின்னுமாசையால் தன்னைச் சுற்றி வட்டமிடும் பறவைக் கூட்டங்களாகிய நிழலே தனக்குக் கொற்றக் குடை நிழலாய் அமர்ந்திருக்க, எலும்புகளைத்தின்னு மவாவினால், இவனுக்கு விருப்பமுண்டாகும்படி பலநரிகள் அமைச்சராய்இவனைச்சூழ்ந்துநின்று ஊளையிடப் பசி வருத்தத்தினால் துன்பங்கொண்ட முகமுடைய பகனிருந்த நிலையைக்கண்டு இவனைக் கொல்லச் சண்டை செய்தால் இவ்வளவு அன்னமும் மற்றுமுள்ள உணவுகளும் கெட்டுப்போய்விடுமே யென்று முதலில் அவ்வடிசிலைத் தின்ன இச்சை கொண்டவனான வீமன் முழையுள் அடையும் அன்னம்போல் தன் வாயில் அன்னத்தை அடைத்தான்.

இச்சருக்கத்தில் தாய்தந்தையரைச் சனக சனனியரென்றும், அன்னத்தை வல்சியென்றும், பிணத்தையுணவாகவுடைய அரக்கன் என்பதற்குக் குணபவல்சியென்றும் மக்களை மாக்களென்றும் கூறியிருப்பது குறிக்கத்தக்கது. வீமனுக்கும் பகனுக்கும் நடந்த யுத்தத்தைக் கூறுமிடத்து, ஆசிரியர் வல்லெழுத்துக்களையே உபயோகித்தும், முதலிரண்டடியில் றகரவொற்றையும் பின்னிரண்டடியில் டகரவொற்றையும் கலந்து அடுக்குத்தொடரோடு முட்டியுத்தத்தை நடத்திவைப்பது காதுக்குச் சண்டையிடுவதுபோன்றே ஒலிக்கின்றது.

பட்டவர்த்தனர்கள் பொற்சிரத்தின்மலர்
பெற்புடைச்சரண பற்பனு
நெட்டிருட்சரனும் வெற்புவெற்பினொடு
நிச்சயித்துடல நிற்பபோல்
வட்டம்வட்டம்வர வொட்டியொட்டியுறு
மற்றொழிற்செருவின் மட்டியா
முட்டியுத்தநிலை கற்றகற்றவகை
முற்றமுற்றவெதிர் முட்டினர்.

[சரணபற்பன்-பாத தாமரையையுடைய வீமன். வெற்பு. மலை. உடல . சண்டையிட. முட்டியுத்தம்-முஷ்டிப்போர்-பத்மம், பற்பம் எனமாறிற்று. அடுக்குகள் மிகுதிபற்றி வந்தன. இதிற் சந்தந்தவிரச் சிறந்தபொரு ளின்மையால் பொருள்கூறாது விடுத்தனம்.]

இதுவரையில் இவ்வருடச் சந்தாவை அனுப்பாதவர்களுக்கு இப்பொழுது வி. பி. அனுப்பிக்கொண்டு வருகின்றோம். தயவு செய்து தாமதமின்றிப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். மானேஜர்.

தமிழ்ப் பாடம் 65.

[நளவெண்பா.]

கலி நீங்கு காண்டம்.

குதிரையின் உளம் அறிந்து ஓட்டும் அசுவஹிருதய வித்தையை வாகுகன் காட்ட, அதனைக் கற்பதற்கு அவாவிய இருதுபன்னன் தானும் அக்ஷஹிருதய வித்தை என்னுமொரு கணிதவித்தையைக் காட்டி, இவ்விரண்டு வித்தைகளையும் ஒருவருக்கு ஒருவர் போதித்தனர். அதற்குள் தேரும் விதர்ப்ப நாடு வந்து சேர்ந்தது. கலியும்நளனை விட்டு நீங்கினான்.

இத்தாழ் பணையி லிருந்தான் றிக் காயெண்ணின்
பத்தா யிரங்கோடி பாரென்ன—உய்த்ததனில்
தேர்நிறுத்தி யெண்ணினான் றேவர் சபைநடுவே
தார்நிறுத்துந் தோள்வேந்தன் றான். 47.

பதப்பிரிவு:—இ தாழ் பணையில் இருமை தான்றி காய் எண்ணின் பத்து ஆயிரம் கோடி பார் என்ன உய்த்து அதனில் தேர் நிறுத்தி எண்ணினான் தேவர் சபை நடுவே தார் நிறுத்தும் தோள் வேந்தன்தான்.

அன்வயம்:—(இருதுபன்னன்) "இத் தாழ்பணையில் இரும்தான்றிக் காய் எண்ணின் (அவை) பத்து ஆயிரம் கோடி, பார்", என்ன, தேவர் சபைநடுவே தார்நிறுத்தும் தோள் வேந்தன்தான், அதனில் தேர் உய்த்து நிறுத்தி எண்ணினான்.

பதவுரை

"இ - இந்த
தாழ் - பள்ளமான
பணையில் - வயலிலுள்ள
இரும் - பெரிய
தான்றி - தான்றி மரத்திலுள்ள
காய் - காய்களை
எண்ணின் - கணக்கிட்டால் (அவை)
பத்து ஆயிரங் கோடி - பதினாயிரங் கோடி காய்கள் ஆகும்
பார் - எண்ணிப்பார்த்துச் சோதித்துக்கொள்"
என்ன - என்று (இருதுபன்னன்) கூற
தேவர் - தேவர்கள் வந்திருந்த
சபை - (சுயம்வர) சபையின்
நடுவே - மத்தியில்
தார் - (தமயந்தியின் சுயம்வர) மாலையை
நிறுத்தும் - நிலைபெற ஏற்றுக்கொண்ட
தோள் - தோள்களையுடைய
வேந்தன்தான் - வேந்தனாகிய நளன்,
அதனில் - அவ்வயலின்கண்
தேர் - தேரை
உய்த்து - செலுத்தி
நிறுத்தி - நிறுத்தி
எண்ணினான் - தான்றிக் காய்களை எண்ணிப் பார்த்தான்.

விரிவுரை:—பதினாயிரங்கோடியை எண்ணுவதென்றால் எத்தனை வருடங்களாகுமென்று நினைக்கின்றீர்கள். நிமிடத்திற்கு நூறு காய்கள்வீதம் வாகுகன் எண்ணினான் என்று வைத்துக்கொள்வோம். ஆயின் பதினாயிரங்கோடி எண்ணிப் பார்ப்பதற்கு 1904 வருஷம், 10 மாதம், 17நாள், 18மணி, 4 நிமிடங்களாகும். இப்படி நூற்றூண்டுக் கணக்காய்த்தான்றி மரக் காய்களை எண்ணிக்கொண்டிருந்தால், நாளை அளவு நிற்கின்ற சுயம்வரத்திற்கு என்றுபோய்ச் சேர்வதோ. ஒரு ஆயிரவருஷம் எண்ணிவருகையில் எண்ணின காய்களையே எண்ணுகின்றானோஎன்ற சந்தேகம் இடையேவந்து கணக்குக் கலையுமானால், மறுபடி அடியைப்பிடித்து ஆரம்பிக்க வேண்டியதுதானே. இருதுபன்னன்தான் மந்திரத்தால் சொன்னான். அம்மந்திரந் தெரியாதவர்கள் அதனைச் சோதித்து அறியவும் இயலாது. இன்னவிதம் யுகமே மாறக்கூடிய காலாந்தரங்களை ஒரு நொடி அளவிற்குள் அடக்கக்கூடிய துணிவு புலவர்களுக்கே உரியது

பொய்யோ மெய்யோ, எம்மனோர் சிந்தனைக்கு எட்டுமோ எட்டாதோ,நளனோ எண்ணிப்பார்த்து இருதுபன்னன் சொன்ன கணக்கின்நேர்மையைத் தேர்ந்து வியந்துநின்றான். அசுவமந்திரத்தை அவனிடம் கேட்டுக் கற்பதற்கு அதுவே ஏற்றசமயம் என அயோத்தி மன்னனுந் துணிந்தனன்.

ஏரடிப்பார் கோலெடுப்ப வின்றேன் றொடைபீறிக்
காரடுத்த சோலைக் கடனாடன்—தேரடுத்த
மாத்தொழிலு மித்தொழிலு மாற்றுதுமா லென்று [ரைத்தான்
தேர்த்தொழிலின் மிக்கானைத் தேர்ந்து. 48.

பதப்பிரிவு:—ஏர் அடிப்பார் கோல் எடுப்ப இன் தேன் தொடை பீறு இ கார் அடுத்த சோலை கடல் நாடன் தேர் அடுத்த மா தொழிலும் இ தொழிலும் மாற்றுதும் ஆல் என்று உரைத்தான் தேர் தொழிலின் மிக்கானை தேர்ந்து.

பதவுரை

ஏர் - உழுகின்ற எருதுகளை
அடிப்பார் - ஓட்டுகின்றவர்
கோல் - கோலை
எடுப்ப - ஓங்க (அந்தக் கோல்)
இன் - இனிய
தேன் - தேனினது
தொடை - கூண்டை
பீறு - கிழிப்பதாகின்ற
கார் - மேகத்தை
அடுத்த - அளவாய
சோலை - சோலைகளால் சூழப்பட்ட
இ - இந்த
கடல்நாடன் - கடற்கரையுடைய கோசலநாட்டரசனாகிய இருதுபன்னன்,
"தேர் - தேரை
அடுத்த - சேர்ந்த
மா - குதிரைகளை மந்திரத்தால் ஓட்டும்
தொழிலும் - உன்னுடைய தொழிலையும்
இ - இந்தக் கணக்கு
தொழிலும் - தொழிலையும்
மாற்றுதம் - மாற்றிக்கொள்வோம்"
என்று - என்று
தேர் - தேர்ஓட்டும்
தொழிலில் - தொழிலில்
மிக்கானை - வல்லவனாகிய நளனைக் கேட்டு
தேர்ந்து - அவன்இஷ்டத்தைத் தெரிந்துகொண்டு
உரைத்தான் - தன் அக்ஷஹிருதய மந்திரத்தைச் சொல்லித்தந்தான்.

வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பா னின்ற பசிபோல நீங்குற்றான்
காவலன்பா னின்ற கலி 49.

பதப்பிரிவு:—வண்டு ஆர் வளமை வயல் சூழ் மள்ளுவ நாட்டு எம் கோமான் தண் தார் புனை சந்திரன் சுவர்க்கி கொண்டாடும் பாவலன்பால் நின்ற பசிபோல நீங்குற்றான் காவலன்பால் நின்ற கலி.

பதவுரை

காவலன்பால் - நளனிடத்தில்
நின்ற - சேர்ந்திருந்த
கலி - கலிபுருடன்,
வண்டு - வண்டுகள்
ஆர் - நிறைந்த
வள - வளமைமிகுந்த
வயல் - வயல்கள்
சூழ் - சூழ்ந்த
மள்ளுவநாட்டு - மள்ளுவநாட்டை ஆள்கின்ற
எம் - எம்முடைய
கோமான் - அரசனாகிய
சந்திரன்சுவர்க்கி - சந்திரன்சுவர்க்கி யென்பவன்
கொண்டாடும் - பாராட்டுகின்ற
பாவலன்பால் - புலவனிடத்தில்
நின்ற - இருந்த
பசிபோல - தரித்திரம் அகன்று விடுவதைப்போல
நீங்குற்றான் - (அறவே விரைவில்) நீங்கிவிட்டான்.

விளக்கம்:—கலி—பசிபோல்—நீங்குற்றான், என்று கூட்டி முடித்துக்கொள்ளல் வேண்டும்.

விரிவுரை:—புகழேந்திப்புலவர் இந்தச் செய்யுளில் தன்னை ஆதரித்த வள்ளலாகிய சந்திரன்சுவர்க்கியைப் போற்றுகின்றார். சிறிதும் தங்காமல் விரைவின் அகன்று திரும்பியும்வராமல் நளனைவிட்டுக் கலி தீர்வதற்கு உவமையாக, இலன் என்னும் எவ்வம் உரையாமல் ஈயும் குலவள்ளல் சந்திரன்சுவர்க்கியைச் சேர்ந்த பாவலர்களது பசியை எடுத்துக்கூறிய இது புகழேந்தியின் பெருந்தன்மையை விளக்குகின்றது. இவ்விதம் கம்பர் வில்லிபுத்தூரர் அனைய மற்றப்புலவர்களும் தம்மைஆதரித்தவள்ளல்களைத் தம்நூல்களுள்ளேஉவமை நலத்தினால் செருகிப் புகழ்கின்ற வழக்கமுண்டு. இவ்விடயங்களை ஸ்ரீமான். T. N. சேஷாசலம் தம் கம்பராமாயணக் கட்டுரையொன்றில் (வால்யூம். 1. பக்கம் 813) ஆராய்ந்திருக்கின்றனர் அதனில் புகழேந்தியின் இதுபோன்ற மற்றச் செய்யுள்களையும் தொகுத்துள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் அக்கட்டுரையை எடுத்து ஒருமுறை படித்துக்கொள்ளல் நலமாம்.

"சந்திரன்சுவர்க்கி கொண்டாடும் பாவலர்" என்னும் தொடரைச் சந்திரன்சுவர்க்கி கொண்டாடுகின்ற பாவலர் என்று எழுவாய்த்தொடராகவும், சந்திரன் சுவர்க்கியைக் கொண்டாடும் பாவலர், என்று இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவுங் கொள்ளலாம். முன்னதன்படி சந்திரன்சுவர்க்கி தானே மதித்துப் பாவலர்களுக்கு உதவுகின்றான் என்ற பொருள் எய்தும். பின்னதன்படி தன்னைப் புகழ்ந்து பாடியவர்களுக்கே அவன் உதவுகின்றான் என்று எண்ணவேண்டும். இவ்விரண்டினில் முதல் அர்த்தமே அவனுக்குப் பெருமையை அதிகம் அளிக்குமாகையால் அதனையே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

இலக்கணம்.

18904

இதுவரையில் நடந்த இலக்கணப் பாடங்களையெல்லாம் நமது வாசகர் தொடர்ச்சியாக இப்பொழுது ஒருமுறை படித்து நினைவுபடுத்திக்கொள்ளல் தக்கதாம். பெயர்ச்சொற்களையும் அவைகளின் வேற்றுமையையும்பற்றிக் கூறியனயாவும் நினைவிலிருக்கவேண்டியது இனிவரும் இலக்கணப்பாடங்களுக்கு மிகவும் அவசியம். அவ்வாறே வினைச்சொற்களில், குறிப்பு தெரிநிலை, ஏவல் வியங்கோள் முற்று எச்சம் வினையாலணையும்பெயர் முதலிய பாகுபாடுகளையும் மறத்தல் கூடாது.

ஏனெனில், இப்பொழுது சொற்றொடர். இலக்கணம் ஆரம்பிக்கப்போகின்றோம். இத்தொடர்இலக்கணத்தைக் கற்பதற்குவேண்டிய அளவுதான் நாம் இதுவரையில் சொல்லிலக்கணத்தில் வற்புறுத்திக் கொண்டு வந்துளோம். சொற்றொடர் இலக்கணம் மிகவும் முக்கியமானது. இது நன்றாகத் தெரியாமற் போனால், எழுத்துக்கள் புணர்கின்ற புணரிலக்கணத்தைக் கற்கவே முடியாது. தமிழைப் பிழையில்லாமல் எழுதுவதற்கும் செய்யுள்களைப் பதம்பிரித்துப் பொருள் தெரிந்துகொள்வதற்கும் புணரிலக்கணத் தேர்ச்சியில்லாமல் தீராது. அப்புணரிலக்கணத்திற்கு வேண்டிய எழுத்திலக்கணமும் சென்ற சில பாடங்களில் சொல்லிவைத்துள்ளோம். தொடரிலக்கணமுங் கற்றுவிட்டால் புணரிலக்கணத்திற்குப் போகலாம். புணரிலக்கணம் முடிவதுடன் ஐந்திலக்கணங்களில் எழுத்து சொல் என்ற இரண்டு இலக்கணங்களிலும், செய்யுள்களைப் பொருள்செய்துகொள்வதற்கு வேண்டிய அளவு கற்றுக்கொண்டதாகும். அணியிலக்கணம் அனேகமாய் நளவெண்பாவைச் சார்ந்தே சொல்லித் தந்துளோம். முக்கியமான அணிகளினுடைய தன்மையெல்லாம் இப்பாடங்களில் கூறப்பட்டுள்ளன. இன்னுமிருக்கின்ற சில சிறுஅணிகளின் பெயரும் இலக்கணமுந் தெரிந்துகொள்ள விரும்புகின்றவர்கள் "தண்டியலங்காரம்" என்னும் நூலிலிருந்து தாமாகவே எளிதில் கற்றுக்கொள்ள இயலும். பொருளிலக்கணத்தில் ஸ்ரீமான் இராமரத்நம் ஐயர் அகப்பொருளை முடிவிற்குக் கொண்டுவருகின்றார். பிறகு புறப்பொருள் ஆரம்பிப்போம். நளவெண்பா முடிந்ததும் 'அஷ்டப்பிரபந்தம்' என்னும்நூலை நம் பாடத்திற்குஎடுத்துக்கொள்ள நினைத்திருக்கின்றோம். அந்நூலோடு சேர்த்து யாப்பிலக்கணத்தின் முக்கியமான பாகங்களை விளக்குவோம். அப்பொழுது ஐந்திலக்கணங்களையும் இக்கலாநிலயத்தின்மூலமாக ஒருவாறு கற்பித்ததாகும்.

மலர்வனம்

இன்னுமோ ராயிர மியம்புவேன்.

ஆங்கில நாவலாசிரியர்களில் முதல்தர வகுப்பைச் சேர்ந்த சார்லஸ் டிக்கன்ஸ் என்பவர் எழுதியுள்ள பல நூல்களில் முதன்மையாய்க் கொண்டாடப் பெறும் டேவிட் காப்பர்பீல்ட் என்னும் நாவலில், புது மணம்புரிந்த தன் மனையாளொடும் இல்லறம் நடத்து நாளில்ஒருநாள்கிருகசித்திரத்தில்நிகழ்ந்தசிறியதொரு சம்பவத்தைக் கதாநாயகன் தானே சொல்லுகின்றான். தனக்கும் தனது மனைவி டோராவிற்கும் நடந்த சம்பாஷணையன்றி அது பிறிதொன்றில்லை. அதனைக் கதவின் மூலையில் ஒளிந்து, நண்பர்காள், எம்மொடு ஒற்றுக்கேட்க வம்மின் :—

"என்னரும் உயிரே, நமது சமையற்காரிக்குக் காலம் மணி நேரம்என்னுமிவைகளைப்பற்றி ஏதேனும் அபிப்பிராயம் உண்டென்று நினைக்கின்றாயோ,நீ" என என் மனைவியைநோக்கி ஒருநாள் நான் கூறநேர்ந்தது.

காகிதத்தில் பென்ஸிலைக்கொண்டு ஏதோ படம் எழுதிக்கொண்டிருந்த அவள்,மெள்ளத் தன்தலைநிமிர்ந்து ஒன்றுமறியாவொரு பேதைப்பார்வையுடன், "ஏன் அப்படிக் கேட்கவேண்டும்" என்று வினவினள்.

"ஏனெனில், அன்பே, மணி பன்னிரண் டாகிவிட்டது. நாமோ பத்துமணிக்குச் சாப்பிட்டிருக்க வேண்டும்" என்றேன் யான்.

டோரா கடியாரத்தை உற்று நோக்கினாள். நோக்கி அது வேகமாய் ஓடுகின்றதெனச் செப்பினள். நான் என் கைக்கடியாரத்தை எடுத்துப்பார்த்து, "இல்லை, அந்தக் கடியாரம் தாமதமாகவே ஓடுகின்றது" என்றேன்.

எனது சின்னஞ்சிறு மனையாள் பையப்பைய வந்து என்னைச் சாந்தப்படுத்த நினைத்தனளாய் என்னுடைய மடியின்மீது அமர்ந்தனள். அமர்ந்து, தன் கையிலிருந்த பென்ஸிலால் என் மூக்கின் நடுவில் ஒரு கோடு கிழித்தனள். அச்செய்கை எனக்கு மிக்க இன்பமாயிருந்தாலும் மூக்கிலிழுத்த கோட்டைக்கொண்டு புசிக்க இயலாதே.

"எனது இனியாய், இந்தச் சமையற்காரியைச் சிறிது நீ எச்சரிக்கை செய்துவைத்தால் நலமன்றோ" என்றேன்.

"ஊ ஹூம். தயவுசெய்து அதுமாத்திரம் சொல்லப்படாது. என்னால் அது எப்படி முடியும்!" என்றனள் டோரா.

"இயலாதது ஏனோ, என் காதலி" என்று மிகவும் மிருதுவாய் வினவினேன்.

"ஏனென்றால், நான் சுத்த அசடு; அது அந்தச் சமையற்காரிக்குந் தெரியும்" என்று டோரா பதிலுரைத்தாள்.

இந்த எண்ணத்தோடு இவளிருப்பது வீட்டின் திட்டம் நடைபெறுவ தென்பதற்குப் பொருந்ததென்று நினைத்த நான் முகத்தைச் சிறிது சுளித்துக் கொள்ள லாயினேன்.

"ஐயய்யோ! இந்த நெற்றியெல்லாம் சுருங்கிப் போயிற்றே! என்ன விகாரமிது!" என்று உரைத்துக் கொண்டே,டோரா என்நெற்றி சுருங்கியவழியேபென்ஸிலைக்கொண்டு கோடுகள்கிழிக்க ஆரம்பித்தாள். அக்கோடுகள் கருப்பாய் விழுவதற்காக இடையிடையே பென்ஸிலைத் தன்பவளம்போன்ற உதடுகளில் தோய்த்துத் தோய்த்து மகா கவனத்தோடு மிகவும் முக்கியமான வேலையைச்செய்வதுபோல் முகத்தை வைத்துக் கொண்டு அவள் இவ்வாறுசெய்த இது என்னையறியாமலே எனக்குப் பெருமகிழ்வு உண்டாக்கியது.

"இப்பொழுதுதான் நல்ல குழந்தை. சிரிக்கும் போது இந்தமுகம் எவ்வளவு அழகாயிருக்கின்றது, தெரியுமோ!" என்றனள்.

"ஆனால், டோரா, என் அன்பே......" என்று நான் வாயெடுத்தேன்.

"வேண்டா, வேண்டா, காரியமாய்க் கருத்தைச் செலுத்தி யொன்றும் பேசத் தலைப்படக்கூடாது" என்று முத்தமொன் றிட்டுக்கொண்டே கூவினள்.

"காரியமாய்ப்பேசுகின்ற சமயமுந்தான் இருக்கும். விலையிலாவென் மாணிக்கமே; இந்தா, இந்த நாற்காலியில் எனதருகில் உட்கார்ந்துகொள்......இந்தா, அந்தப் பென்ஸிலைக் கொடுத்துவிடு பார்ப்போம்....அது சரி...நல்லது, இப்பொழுது நாம் கொஞ்சம் புத்தியைச் செலுத்திப் பேசுவோம், வா, அன்பே,"...... (என்ன சின்னஞ்சிறு கை இவளது. நானிட்ட விவாக மோதிரமும் என்ன அழகாக விளங்குகின்றது)...... எனதன்பே, சாப்பிடாமல் வெளியில் போவதென்றால் அவ்வளவு திருப்தியாய் யாருக்கு மிருக்காதென்பதை அறியாயோ, நீ. சொல்" என வினவினேன்.

"இ...ரு...க்...கா...து" என்று டோரா சோர்ந்து சொன்னாள்.

"என் செல்வமே, ஏனிப்படி நடுங்குகின்றாய்?" என்று அவள் கைகளைப் பற்றியிருந்த நான் கேட்டேன்.

"ஏனெனில், எனக்குத்தான் இப்பொழுது நல்ல வசவு விழப்போகின்றதே...அதற்குப் பயந்து நடுங்குகின்றேன்" என்று டோரா இரங்கிய குரலில் உரைத்தாள்.

"எனதினியாய்:—கொஞ்சம் விவகாரமாய்ப் பேசப் போகின்றேன், அவ்வளவுதான்" என்றேன் யான்.

"விவகாரமாய்ப் பேசுவதென்பது வைவதைக்காட்டிலும்கொடியதாயிற்றே; இவ்வளவுதெரியாதோ, எனக்கு!" என்றுகையற்றுக்கதறினளாய்ட்டோரா, "விவகாரம் பேசுவதற்காகவா விவாகஞ் செய்துகொண்டேன்! என்னைப்போன்ற ஒரு பேதையுடன் விவகாரம் பேசுவது கருத்தாயிருந்திருந்தால் முன்னரே எனக்கதைக் கூறியிருக்கவேண்டும். கூறாது என்னை மணங்கொண்ட செய்கை கொடியது." என்று விம்மினாள்.

டோராவைச் சாந்தஞ்செய்ய முயன்றேன். அவளோ தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு சுருண்டிருண்ட கூந்தல் கன்னத்தில் புரண்டுருள, "கொடுமை! கொடுமை! அப்பா, என்னகொடுமை!" என்னப் பலதரங் கூறிக்கூறித் தலையை அசைப்பாளாயினாள். இந்நிலையில் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தேன். எழுந்து அங்குமிங்கும் அவ்வறையில் ஐந்தாறுமுறை உலவினேன். மீண்டும் அவளருகு வந்து, "டோரா, என் செல்வமே......" எனவழைக்க, அவள் "இல்லை. நான் ஒருவருக்குஞ் செல்வமல்லள்....என்னை ஏன் மணம் புரிந்திருக்க வேண்டுமென்று விசனப்பட்டுக்கொண்டே செல்வமென்று அழைப்பானேன்...

இல்லையெனில் என்னொடு விவகாரம் பேசவருவார் யார்!" என்று மறுத்துரைத்தனள்.

"இதோ பார், டோரா, நீ வெறுங் குழந்தைத்தனமாய்ப் புத்தியில்லாமற் பேசுகின்றாய். சமையல் பாதி ஆவதற்குள்ளேயே நேற்று நான் வெளியே போக வேண்டி யிருந்ததென்பதை நீ மறந்துபோ யிருக்க மாட்டாய்; அதற்கு முன்நாள் வேகாத சோற்றைத் தின்று என்வயிறு புரட்டிக்கொண்டிருந்தது. இன்றைக்கோ, சோறே இல்லை—எத்தனை நேரமாகக் காத்துக் கொண்டிருக்கின்றேன். நீயே சொல்—இன்னும் உலைநீர்கூடச் சுடவில்லை. உன்மேல் குற்றங் கண்டுபிடிக்க வேண்டுமென்பது, என் கண்ணே, எனது கருத்தன்று—இதுவெல்லாம் திருப்தியாயில்லை, பார்."

"அப்பா! கொடுமை! கொடுமை!! என்னை இதற்குள்ளா வேண்டாப்பெண்டாட்டி என்றுசொல்வது!" என டோரா அழ ஆரம்பித்தாள்.

"இந்தா, என்றனருமை டோரா, நானப்படி யொன்றுஞ் சொல்லவில்லை யென்று உனக்கு நன்றாய்த் தெரியும்" என்று தேற்ற முயன்றேன்.

"ஏற்றவளாய் நானில்லை யென்று இப்பொழுது சொன்னதுதான் யாரோ!" என்றனள் டோரா.

"வீட்டுக்காரியங்கள் சவுகரியத்திற்கு ஏற்றனவாய் இல்லையென்றல்லவோ சொன்னேன்" என உரைத்தேன்.

"இரண்டும் ஒன்றுதான். வித்தியாசமே யில்லை" எனக் கூறினாள். கூறியதுமல்லாமல் டோரா நினைத்ததும் அப்படித்தான்போ லிருக்கின்றது. ஏனெனில் அவள் கண்களிலிருந்து வெள்ளம் பெருகலாயிற்று.

என்னருமழகிய மனைவியின்பால் அளவற்ற ஆசையோடு அமைந்தநான், இவ்வாறவளை வருத்தியதற்காக என்னையே சிறிது நொந்தவனாய் எழுந்து அவ்வறையில் மறுபடி உலவத்தலைப்படக் கதவிற்போய் முட்டிக் கொண்டு பின் அவளுக்கயலில் வந்து உட்கார்ந்து, "உன்மேல் ஒரு குற்றமும் சொல்லவில்லை, டோரா. நாம் இருவரும் தெரிந்து கொள்ளவேண்டியது நிரம்ப இருக்கின்றது. இந்தச் சமையற்காரியை நீ சரியாய்ப் பார்த்துக்கொள்ள நீ தெரிந்தவளாக வேண்டும்—எப்படியாவது தெரிந்துகொள்ளத்தான் வேண்டும்—என்பதைத்தானே சொல்லிக் காட்டினேன். அப்படியே, உனக்காகவும் எனக்காகவும் கொஞ்சங் கொஞ்சம் காரியமும் செய்வதற்கு நீ பழகிக்கொள்ளவும் வேண்டும்" என்றேன்.

"இப்படி நன்றியில்லாமற் பேசுவது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது. சகிக்கமுடியவில்லை" என்று விம்மிவிம்மி, "அன்றைக்குச் சிறிது மீன் வேண்டுமென்று ஆசைப்பட்டபோது, நானே வெளியிற்போய் மைல்மைலாகநடந்து கடைக்காரனை அனுப்பும்படி சொல்லிவந்தேன்...இது நன்றாகத் தெரிந்திருந்தும் நான் காரியம் செய்வதில்லை என்றுசொல்ல எப்படித்தான் மனம் வந்ததோ" என நைந்தனள்.

"டோரா, உன்னுடைய அன்பிற்கு அளவேஇல்லை. அந்தச் சந்தோஷத்தால்தான் நீ வாங்கியதுவரால்மீன் என்று நான் வாயைத் திறக்காததும். நாம் இரண்டு பேர் ஒரு பெரிய வராலை வைத்துக்கொண்டு என்ன செய்வது! அதற்கு நான், ஒருபவுன் ஆறு ஷில்லிங் (இது ஏறக்குறைய இருபது ரூபாய்க்கு நிகராகும்) கொடுக்க வேண்டியிருந்தது. இவ்வளவு விலைக்கு மீன் வாங்கித்தின்ன நமக்குக் கட்டுமோ! இருந்தாலும் நீ மனம் வருந்தப்படாதென்றே நானொன்றுஞ் சொல்லாதிருந்தேன்" என்று பெருமூச்சு விட்டேன்.

"ருசி பார்த்துத் தான் சாப்பிட்டதெல்லாம்....சாப்பிட்டு எனக்குச்சமானமா யொருத்தி யாருக்குமனைவியாய் வாய்க்கக்கூடும் என்றுஞ் சொன்னதிற்குறைவில்லை...." என அவளும் பெருமூச்சுவிட்டனள்

என் கண்ணே, இப்பொழுதும் அப்படித்தான் சொல்கின்றேன். ஓராயிரந்தரம்இன்னுஞ்சொல்வேன்" என்று நான் அவள் முகமலர இயம்பினேன்.

இச்சிறு உரையாடல் இதனோடு முடிந்தது. இது பூசலெனின் பூசலன்று. நம்மனோர் அறிந்தவண்ணம் ஊடலெனின் ஊடலுமன்று. இல்வாழ்வார் இன்பத்தின் வளர்ச்சிக்காக இடையிடையே பாய்கின்ற நீரேயாகும். இத்தகைய நிலைகளின் பிரதிபிம்பத்தை யாவர் மனையிலும் ஒவ்வொருபோது கண்டிட நேர்கின்றது. "நின்னனைய நன்மனையாள் யாரே பெற்றார், என்ன இன்னுமோ ராயிரம் முறை இயம்புவேன்" என்று கொண்டோன் தன் அன்பைத் தெரிவித்திடத்திற்கு உதவிசெய்த அம்மடைத்தொழிலாட்டி, உணவு ஆக்கி வைக்காது காலந்தான் நீட்டினாளெனினும், இவ்விருவர்தம் நன்றிக்கும் பாத்திரமாகின்றாள். மனைக்குரிய சிறு கருமங்களைச் செவ்விதின் நடத்திவைக்க டோரா கற்றிலள். எனினுந் தனதன்பன்பால் காதலேயன்றிக் கற்புப் பிறிதிருந்ததெனும் நினைவு அன்னாள் மனத்தில் மேவியதில்லை.

இந்த டேவிட் காப்பர்பீல்ட் என்னும் நூலின் ஒரு பதிப்பிற்கு முகவுரை வரைந்துள்ள செஸ்டர்டன் என்பவர் நூனயமுணர்ந்து நுண்ணிதினுரைக்கும் உணர்வும் ஆற்றலும் உடைய பெருமக்கள்தம் உயரிய இனத்தைச் சேர்ந்தவர் ஆவர். அவர்தம் முகவுரையில், இச்சம்பவத்தைப்பற்றிக் குறிக்கின்ற உரைகளைக் கருதுங்கால் நூலின்கண் நாம் கண்டஇன்பம் பின்னுமொருபடி பெருகுகின்றது. கூறுவார் அவர்:— "டோரா தன்வீட்டின் கருமங்களைக் கலக்கிக்குழப்பி விடுகின்றாள்; ஆனால் இவ்விதம் கலக்கிக் குழப்பி வீட்டின் கருமங்களைக் கெடுக்கின்றனளே என்று நாம் அவளைக் கோபிப்பதில்லை. டோராவைக் கலக்கிக் குழப்பி விடுகின்றனவேயென்று நாம் வீட்டுக் கருமங்களைத்தான் கோபிக்கின்றோம். வேகாத சோற்றைப் பற்றி டோராவும் அவள் புருடனும் சண்டையிட்டனர்; ஆனால்இவ்விதமே அவர்ஆயுள்முடிவுவரையிலும் போரிட்டுக்கொண்டே இருந்தார் எனினும், ஆயுள் முடிவுவரை அவர் இருவரும் ஒருவரையொருவர்காதலித்துக்கொண்டு மிருந்திருப்பர். இதுவே மாநுடர் தன்மைக்கியன்ற மணநிலை என்னத்தக்கது."

ஆம், அன்போடு சண்டையிட்டு வேகாத சோற்றை உண்பது எந்நாளும் அன்பிலாள் இன்சொல்லோடு அறுசுவையுண்டி அமைப்பதனினுஞ் சிறந்ததன்றோ?

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

11. குலமுறை கிளத்து படலம்

கலைமுறை காக்கக் கோசிகன் விரைந்தான்.

216 பக்கத் தொடர்ச்சி

ஆவொன்றின் பொருட்டாக வதிர்கழ லார்ப்ப வோங்கிப் பூநின்ற புத்தேள்தன் புதல்வனைப் பொருதபோது சேய்பொன்ற வலி குன்றித் தோல்வியுற்ற சினத்தினோடும் வாய்மென்று துறவுபூண்ட கோசிகன் மாதவத்தோன் ஆனேனும் அவனுக்கு வசிட்டன்பால் இகலொன்று எஞ்ஞான்றும் இடையிடையே தோன்றலாகின்றது. ஆதி வன்மமோ, மற்று அறவோர்க்கு மவ்வியந்தானுண்டோ! இக்கோசிகன், அரிச்சந்திரன் திறத்திலும் திரிசங்குவின்காரணமாகவும் வசிட்டனோடுடன்றுடன்று உடைந்துபோயினன். இன்னபடி என்றும் இகலிழுந்த பழியெல்லாம் அவ்வசிட்டன்பால் தீர்த்துக்கொள்ளக் காத்திருந்த இம்முனிவனுக்குக் கம்பராமாயணத்திலோ செவ்வியும்வாய்த்ததென எண்ணும்வண்ணம் இக்குலமுறை கிளத்துபடலம் வந்துதவக் காண்கின்றோம். ஆயினும், இவனிங்குத் தீருமாறு புரிந்ததும் நேருக்கு நேரான பழியன்று என்று தேர்தல்வேண்டும். முன்னைநாள் தன்னை வசிட்டன் செற்றவெலாம் தவத்தின் வன்மையால் ஆனவை. எதிர்நின்று ஒருவனை அவன்கொண்ட ஆயுதமே தானுங்கொண்டு வெல்லுதற்குரிய வாற்றலிலாதான், அவன் நினைத்த கருமம் சில நிறைவேறாது செய்வதாலே தன் குறையைச் சிறிது ஆற்றிக்கொள்வதும் இவ்வுலகத்து மாந்தர்க்கு இயல்புளது. இராமனது குலமுறையை வசிட்டனே கூறவேண்டியவனாயிருக்க விச்வாமித்திரன் இங்கு முந்திப்புக்குக் கூறி முடித்துவிடுகின்றான். இதனை நோக்குங்கால் இப்பின்னையவழியிற் கோசிகன் தன் பழியை வாங்கிக் கொண்டதுபோல் தென்படுமேயானாலும் இன்னுஞ் சற்று ஆழ்ந்து அவனுள்ளத்தை ஆராய்வோமெனின் பொதுவினிற் பயிலும் மானுடரே அனையரானகி அம்முனிவன் பழிதொலைக்கும் நோக்கம்பூண்டு, அதனையும் நேர்சென்று இயற்றாமல் கரவுநெறி கைப்பற்றிச் சாதித்தான் என அவனுக்கு இழிவாக மதிக்க நேரிடாது. வசிட்டன் அயோத்திமா நகரிலிருந்துபோந்து இராமனுடைய குலமுறையைக் கிளத்தற்குமுன், அவனுக்கு அது செய்ய வகையின்றியாமாறு கோசிகன் அன்னதனைத் தானே இயம்பி முடித்தனனென்பது உண்மையே. எனினும் இதன் நோக்கம், முன்னிங் குரைத்தபரிசு, பழிதீர்த்தலே ஆவது வேண்டுமென்பதில்லை. வேறு நோக்கத்தோடும் அவன் அவ்வாறு செய்திருக்கலாம். மற்று அது யாவதாயிருத்தல்கூடும் என்று ஊகிப்பதற்கு வான்மீக முனிவரின் உதவி பயன்படும்

வாங்கரும் பாத நான்கும் வகுத்தவவ் வான்மீகியென்பான் தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச்செய்த இராமகதையில், பிஞ்ஞகன் பிடித்த பெருவில் பிதிர்ந்துபோய பின்னர்ச் சனகன் தயரதமன்னனை அவன் பரிவாரங்களோடுந் தன்னகர் வரவழைத்து விவாகநோன்பும் நடந்தேறியதன்மேல், மன்றற்சடங்கிலொன்றாய்க் கன்னியைக் கொடுப்போர் ஏற்போர் இருதிறத்தோறுந் தத்தங் குலங்கோத்திரங்களை விளம்பவேண்டுமெனும் முறைமைக்கிணங்க இராமன்தந்தை மிதிலாபதியை நோக்கி, "மன்னவா, எங்கள் குலத்திற்கு வசிட்டமா முனிவரே குரு ஆவர் என்பது நீ யறியாததன்று. எவ்விடயத்திலும் பேச வல்லவர் அவரே. அவர்தாம் இக்காலம் விச்வாமித்திரரிடத்திலும் மற்றுள இருடிகளிடத்தும் அநுமதி பெற்று, எனது குலங்கோத்திரங்களை எடுத்து இவ்வவையி லியம்புவார்," எனச் சாற்றினன். விச்வாமித்திரனது அநுமதியைப்பெற்றதன்மேல் வசிட்டன்தன் வாசகம் உரைத்தல் வேண்டுமென வேந்தன் உபசாரமாகக் கூறியதற்கொக்கக் கோசிகண் மறுத்திலன். வசிட்டனும், வான்மீகி தன் நாவில் எழுதியபடி தினகரன் குலத்தராய தராதிபர் பெயர்களைத் தொடர்ச்சியாகப் "பரமாத்மாவினின்று தோன்றியவர் பிரம்மதேவர். அவரிடமிருந்து மரீசி பிறந்தார். மரீசி மகனார் காசியபர். விவஸ்வாந் காசியபரிடமிருந்து உண்டானார். விவஸ்வானுடைய மைந்தர் மநு. மநுவின் குமாரர் இக்ஷ்வாகு........" என இவ்வகைத் தாயத்தார் வழக்கில் வமிசத்தொடர்பு காட்டுமாபோல், இன்னாற்கு மகன் இன்னான் என முப்பத்தொன்பதின்மர் பேரைச் சொல்லித் தயரதன்பேரை எட்டுவதன்முன் பொறுமை தளர்ந்தகன்ற விச்வாமித்திரன் "ஏனிவற்கு நான் இவ்வநுமதி கொடுத்தேன்" என நொந்து நொந்து ஏங்கியிருத்தல் வேண்டும். ஏங்கித் தன் கைகளைப் பிசைந்துகொள்வது இதுபோது நம் கண்முன் நிகழ்வதுபோல் தோன்றுகின்றது. மநுகுல வேந்தர், கொடையாலும் வீரத்தாலும் நீதிவழுவா நெறியாலும் விளங்கியவர் எண்ணிறந்தோர்தம்மில் இரண்டொருவர் சரித்திரத்தையேனும் இடையிடையே சிறிதுரைப்பனோ இந்நன்முனியெனக் காத்திருந்த கோசிகன்செவி சிலிர்க்கும் வண்ணம் "விகுக்ஷியின் புதல்வன் பாணன் என்று புகழும் பிரதாபமும் பெற்றவன்"........"திரிசங்குவின் மகன் வெகு புகழ்பெற்ற துந்துமாரன்'......"துருவசந்தியிடமிருந்து வெகு கீர்த்திபெற்ற பரதன் உண்டானான்"...என வசிட்டன் ஒன்றிரண்டு சொல் சேர்ப்பானாலும், அப்புகழும் பிரதாபமும் எய்தியபரிசொன்றும் உரையாதுபோனதால் இலவங்கனி வெடித்தபடியே அவை கோசிகனுக்கு முடிந்தன. "ஏனைய, அன்னார் பெருமைக்கும் புகழிற்குமுரிய காரணத்தை எள்ளளவும் எடுத்துக் குறிப்பாலுங் காட்ட மாட்டேனென்கின்றாய்" என்று கோசிகனேனும், கதையொன்றை எடுத்துக்கொண்டால் அதனை ஓயாது உரைக்கக்கற்ற சதானந்தனேனும், வேறுள மன்னவர் இருடிகள் யாவரேனும் வினவியிருந்தால் வசிட்டன், தன் முறைக்கு எவ்வகையில் அமைதி கூறியிருப்பான் என்று உய்த்துரைத்தல் அருமையாயிருக்கின்றது. விரித்துரைத்தால் ஓரை கடந்துவிடும் என்பதற்கில்லை. ஏனெனில், திருமண நாளும் அற்றைக்கு மூன்றாம் நாள் எனவே நிறுவினர். மற்று "மநுகுலத்தரசர் ஒவ்வொருவர் சரிதமும் ஆதிமுதல் அந்தம்வரை அறியாதார் இங்கு யாருளர்! விண்ணும்

மண்ணும் நாகருலகமும் அறியுமே. யாவர்க்குந் தெரிந்ததை நான் எற்றுக்கோ எடுத்துரைத்தல் வேண்டும்?" என்னல் வசிட்டனுக்குக் கருத்தாயின், அவ்வுரையும் பொருந்தாதென நினைக்கும்படி அவன் சில பேசியுள்ளான்.

ஏனெனில், நலந்தீது இரண்டும் உரையாமலே பேர்வரிசையைமாத்திரம் முற்றிலும் பகர்ந்து வசிட்டன் முடித்திலன். கதிரவன் குலத்தவர் வரன்முறை வகுத்துவந்த வசிட்டன், இருவர்தஞ்சரிதம் இருந்தபரிசு நினைப்பூட்ட மனங்கொண்டு அசிதன் தோல்வியுற்றவாறும், பிரவிரதன் சாபம் உற்றதும் உரைத்திட நேர்ந்தனன். அசிதனைப்பற்றி அம்முனிவன் கூறுவான்: "பரதன் பிள்ளை அசிதன். இவனொடு போரிடற்கென்றே, ஹைஹயர் தாளஜங்கர் சகவிந்தர் என்ற சூரம்மிகுந்த வேந்தர்கள் தோன்றினர். அன்னவருடன் அடர்த்த இவ்வசிதன் தோல்வியடைந்து இமையமலையை எய்தி அங்குப் பிரகுச்ரவணம் என்னும் ஆச்ரமத்தில் தன் இருமனைவியருடனும் மந்திரிகளுடனும் வசித்து வந்தனன். இவன் அதிக பலசாலியல்லன். இவனுடைய மனைவியர் இருவரும் கர்ப்பமானார். அவர்களில் காளிந்தியின் கருவை அழிப்பதற்கு அவள் மாற்றாள் விடம் வைத்தனள்......பிறகு இக்காளிந்தி ஒரு புதல்வனைப்பெற்றாள். காளிந்தியுற்ற கர்ப்பத்தைச் சிதைக்கும் பொருட்டு மாற்றவள் வைத்த விடத்துடன் அப்புதல்வன் பிறந்தமையால் அவன் ஸகரனானான்."

கோசிகனும் இதனைக் கேட்டிருந்தான். அவைக்குரிய மரபுநோக்கி அவன் வசிட்டனை வாய் மறித்திலன். "இந்திரனே பண்டு விடையேறாய்ச் சுமக்கலான காகுத்தனும், விற்பிடித்த அறமென்னவொரு தனியே திரிந்து அமராவதி காத்த முசுகுந்தனும் இருக்க, அசிதன் கதைதானோ கலைமகளைத் தன் தாயென்ற முறையிற்கொண்ட இம்முனிவன் நாவில் எழுவதாயிற்று" என விச்வாமித்திரன் வாய்மடித்துத் தன் வயிறுபிசைந் திருத்தல்வேண்டும். பிசைந்த வயிற்றினின்று கோசிகன் பிடியைச்சற்று நெகிழ்த்து முன் வசிட்டன், பட்டசெவியிலேயே படும்வண்ணம், மீண்டும், "இரகுவின் மைந்தன் மிக்க தேசுடைய பிரவிருத்தன் ஆவான். இவன் பின்பு சாபத்தால் அரக்கனாயினன். இவனுக்குத்தான் கல்மாஷபாதன் என்ற பெயர் வந்தது" என்று இன்னொரு மன்னன் அவலமுற்ற செய்தியைத் தொடர்ந்து கூறலாயினன். இச்சொற்கள் எற்றிய கோசிகன் "நீள் தவங்கள் யான் செய்ததெல்லாம் இவ்வுரைகேட்டும் என்னுயிர் இன்று நீங்காதிருக்குமாறே" என்று தன்னுளே மதித்தனன்போலும். இந்தச் சரித்திரத்தைச் சாற்றுகின்ற வசிட்டனே அந்தச் சாபத்தையும் இட்டவன், என்பதை நினைக்குங்கால் விச்வாமித்திரன், "என்னே இவன் பெருமித" மென்று உன்னியு மிருப்பான்.

ஆதலால், தயரதன் குலமுதல்வர் சரிதம்யாவும் யாவரும் அறிந்திருப்பராதலால் அதனை எடுத்தியம்பல் மிகையென்றகொள்கையால் வசிட்டன்புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க பெருந்தகையைப்பற்றியும் புலிப்போத்தும் புல்வாயும் ஒரு துறையில் நீருண்ண உலகாண்ட மன்னனைப்பற்றியும், மாயிரு விசும்பின் கங்கை மண்மிசை அழைத்தோனைப்பற்றியும் அவரனைய மாண்புடைய மற்றையோரைப்பற்றியும் எடுத்தியம்பாமல் விடுத்தவனல்லன் எனக் கோசிகன் குனிப்பது சாலப் பொருந்தும். அசிதனையும், மாற்றவளுக்கு விடம் வைத்த அவன் மனைவியையும், சாபமுற்ற பிரவிரதனையும் பொதுமை நீங்கப் பேசுதற்கு நேரமும் நிமித்தமும் நேர்ந்ததாயின், மநு இரகு சிபி மாந்தாதா இக்ஷ்வாகு திலீபன் முதலாயினோர் பேரளவோடு வசிட்டன் வாயில் மறைந்ததற்குக் காரணம் என்னையோ எனச் சிலர் ஐயுறவெய்துதலியல்பே. பின்னாள், வீரமும் விதியும் வாரமுமின்றித் தன்னை வதைத்தனன் இராகவன் என்னக் குறைகண்ட வானரத்தலைவன் வாலி

> காரியன்றகளங்கநிறந்தொன்மை
> ஊரியன்றமதிக்குளதாமெனச்
> சூரியன்மரபுக்குமோர்தொன்மறு
> ஆரியன்பிறந்தாக்கினையாமரோ.

[தொன்றுதொட்டு ஊரெல்லாம் காணும்படி திரிகின்ற சந்திரனுக்குமாத்திரம் கரியநிற மறுவொன்று இருக்கின்றதே யெனும் பொறாமையால் ஏ, ஆரியனே, சூரியன் மரபிற்கும் ஒருமறு நீ பிறந்து ஆக்குவதற்கு இதனைச் செய்தாயோ]

என்று ஏசப்போவதை இப்போதே பொய்ப்பிக்க, இராமன் பிறப்பதன்முன்னும் இரவிதன் குலத்தில் ஒளியற்ற பாகங்களும் சில இருந்தன என்று நாட்டுதற்கோ வசிட்டன் அவ்விரு வேந்தர்தம் சரிதங்களைச் செப்பலாயினன்!

வான்மீகி மகாமுனிவர், இராமசரிதத்தைப் பெரும்பான்மை கதைமுறையில் உரைத்துவருகின்றாராகையால், தன்னுடைய பாத்திரங்கள் சொல்வதற்கும் செய்வதற்கும் உரிய பொறுப்பை, நாடகவகையில் நவில்வோரைப்போலல்லாது, தானே ஏற்றுக்கொண்டு வசிட்டன் இங்கு இவ்விதம் குலமுறை யுரைத்ததற்குக் காரணம் அமையச் செப்புவார் என்றே எண்ணல்வேண்டும். அசிதனையும் கல்மாஷபாதனையும்பற்றி இயம்பியது, சூரியகுலம் அற்றுப்போம்படி மிகப் பெறியஆபத்துகள் நேர்ந்த நிலைகளைக் காட்டி, அவைகளினின்றுந் தப்பி அக்குலம் அழியாது என்றும் போல் இடையீடின்றித் தொடர்கின்ற வன்மையை நம்மனோர்க்கு நினைவூட்டவத் தெய்வமாக்கவி கருத்துட்கொண்டதன் காரியமாயிருக்கலாம். மாற்றாள் வயிற்றில்வாய்த்த மகவிற்குத் தீது செய்த அசிதன் மனைவி, பின்னாள் இனிச் சூழ்வினை செய்வதற்கிருக்கின்ற கைகேசிக்குக் குலப்பழக்கந் தந்தவளாய் நிற்பதை வருவதுணர்ந்த முனிவரர் சுட்டிக் காட்டினரெனினும் அமையும்.

எது எவ்வாறாயினும் வசிட்டன் குலமுறை கூறிய வண்ணம் கோசிகனுக்கு உகந்ததாயில்லை என இக்கட்டுரையின் பொருட்டு எண்ணிக்கொள்வோம். வசிட்டன் சொல்லைக்கேட்கக் கோசிகன் தன் வயிறுங்கையும் பிசைந்தவாறு எந்நூல்களிற் கூறப்பெற்றுளதென வறிதே தேடவேண்டா. நூல்களிற் சில கூறியிருப்பினும் கூறாதொழியினும், "இவ்வாறு ஆதிமுதல் பரிசுத்தமானது" என்று வசிட்டன் இறுதியில் குறித்த அவ்வம்சம் வரும்முறையைப்பற்றிப் பேச மீண்டுமோரிடத்தில் அம்முனிவன் வாய்திறக்க வழிதருவதில்லை என்றொரு சபதம் கோசிகன் செய்துகொண்டனன் என்பது ஒருதலை. வசிட்டனுடன் உளவாய இகலினால் எழுந்த விரதமொழியன்றிது. வசிட்டன் நினைத்தகாரியத்தை அவன் செய்யவொட்டாமல் தடுக்கவேண்டுமென்ற சிறுபுத்தியாலுமன்று. சுவையுடன்

செய்வதற்கியன்றவொருகருமத்தைக் கோசிகன்,தான் மதித்தபடி, வசிட்டன் மறமுறையுங் கெடுக்காவண் ணங் காப்பதற்கே குறிக்கொண்டான். எனின், கம்ப ராமாயணத்தின்கண், வீரமும் வண்மையும் விளங்கு கின்ற தயரதன் தொல்குலக் குரவர்தம் முறையினை வசிட்டன் வாயினின்று எடுத்துக் கோசிகன் தானே இயம்பியதன் நோக்கம், கலையின் உணர்ச்சியோடு கல ந்து அத்திப்பிய சரிதத்தை உரைத்திடற் குற்றவோர் ஊக்கமேயா மென்பது எளிதிற் றெளிதற்பாலது.

தேவபாடையில் விளங்காநின்ற முதனூற்காதையை வேதியருடன் ஆராந்தாராய்ந்து கம்பர் கவிநாதன் பாடிய தமிழ் இராமாயணத்தில், பெருந்தகைமைத் தயரதன்தன் புதல்வரிருவரோடு தன்முன் எய்திய விச் வாமித்திரனைச் சனகன் அடிவணங்கி, "யார் இவரை உரைத்திடுமின், அடிகள்" என்ன வினவிய வாக்கியம் முடியாமுன்னம், அக்கோசிகன், இத்தருணந் தப் பினல் எத்தருணம் வாய்க்குமோ, ஏது வருமோ என ஐயுற்று விரைந்தான்போல், எய்தியசெவ்வியைக் கைப் பற்றி

"ஆதித்தன் குலமுதல்வன் மனுவினையா ரறியாதார்"

எனச் சாங்கோபாங்கமாய்க் குல முறைகிளத் தத் துவக்கிவிட்ட சூழ்ச்சியை எண்ணுவோர் மனத் தினில் கவியின்பம் பெருகலாகின்றது. இவர்கள் யாவ ரெனக் கேட்ட மிதிலை மன்னனுக்கு அக்கேள்விக்குக் குறியாய பிள்ளைகளின் 'தகைமையை' மாத்திரம் பேசுவான் கோசிகன் என்று மதித்தனர் கம்பர். ஆனல் குலத்தின் பெருமையும் இவர்களது பெருமை யு ளடங்குமாதலால் விச்வாமித்திரன், 'தகைமை, என்னுஞ்சொல்லைத் 'தன்மை' என்னும் பொருளிற் கொள்ளாமல் தன் கருத்திற்கிணங்கப் 'பெருமை' என்ற பொருளில் வைத்து, இவர் குலமுதல்வன் வரையில் தன் நினைவை நீட்டலாயினன். வான்மீகி முனிவர் நூலின்கண் நிகழ்ந்ததற்குப் பிறகு இக் கம் பராமாயணத்தில் இராமகதை ஒருமுறை நடை பெறுகின்றது. இதனினும் இராமன் வில்லை முறிப் பான். முறித்தபின் திருமணத்திற்குத் தயரதன் வருவான். வருமத்தயரதனுடன் வசிட்டனும் வரு வது திண்ணம். வந்தானெனின் தன் குலகுருவைத் தயரதன் குலமுறை கூறும்படி வேண்டுவதும், அம் முனிவனும் பண்டறிந்த பழக்கத்தின்படி, "பரமாத் மாவினின்று தோன்றியவர் பிரம்மதேவர். அவரிட மிருந்து மரீசி பிறந்தார். மரீசி மகனர் காசியபர்..." என்று பேரின் வரிசைகளைப் பகர்தலாகி அசிதனையும் கல்மாஷ்பாதனையும் சற்றே சரித்திரம் விளக்கிமுடிக்க நேராது தீராது என்பதை விச்வாமித்திரன் நன்குணர் ந்து அஞ்சினனுய்க் குலமுறையிற் கலைமுறையும் தன் வரமும் வழுவாவண்ணம் இன்றே இங்ஙனே தானே அதனை இயம்பிட்டால் பின்னொருகால் குலமுறை வகுப்பது மிகையாம் என்ற பண்பினல் வசிட்டன் வாய் வாளா இருத்தல்வேண்டும் என்பது இக்கோசி கன்தன் புணர்ப்பெனப் புகல்வது பொருந்தும். பின் மன்றல்நாள் அம்முனிவன் இக்குலமுறையை மிழற் றப் புகுவானேல், "முனிவ, வாய் வருந்தேல்; நின் அநுமதி எனக்கு வாய்க்கும் என்னும் நிச்சயத்தை மனத்திற்கொண்டு முன்னரே யான் மனுவின் மரபு ளோர் வரன்முறையும் யாவும் இயம்பியுள்ளேன். ஈண்டு நீ அதனை மீண்டும் இயம்புதல் மிகையென்று எண்ணுயாயின் இயம்புக" என்னலோடும் வசிட்டன் வாளாவிருப்பதொன்றே இயற்கை.

இங்குமுன் உரைத்தவைகளைக் கருத்திற்கொண்டு கம்பராமாயணத்தின் குலமுறை கிளத்து படலத்தை ஆராயுங்காலையில் அதன் அமைப்பின் தன்மைகள்சில இனிதின் விளங்கும். "யாவரும் அறிந்தவைகளையே கூறுகின்றேனல்லாது புதியதென்ற நினைவினல் நானி தனைச் செப்புகின்றேனல்லேன். அறிந்தவையேனும் நல்லனவாயின் மீண்டுமவைகளை விளங்கக்கூறல்மிகை யென மதித்தற்பாலதன்று" என்ற கொள்கையைக் கோசிகன் கொண்டிருந்தனன் என்பது,

"ஆதித்தன்குலமுதல்வன் மநுவினையார் அறியாதார்"

என அவன் ஆரம்பிக்கின்ற முதல் வாக்கியத்தா லும், மீண்டும் அடுத்தபடி இக்ஷ்வாகுவைப்பற்றிப் பேசும் பாசுரத்தில்

"அணியரங்கந் தந்தானை யறியாதார் அறியாதார்"

என்று விளம்பியிருத்தலாலும் புலப்படுவது அருமை யன்று. வசிட்டன் மநுகுல மன்னவர் பேர்களை விடா மல் வரிசையாய்க் கூறிவந்தனன். விச்வாமித்திரனே, ஆதித்தன் மநு என்ற முதலிருவர் பேர்களையும், கடையில் அயன் தயரதன் என்ற இருவர் பேர்களை மாத்திரமும்செப்பிஇடைவாழ்ந்த வேந்தர்களில்இரகு வின் பேரைத்தவிர ஏனையோர் பேர்களைப் பேசாது அன்னர் செயல்களின் பெருமையாலே அவர்களைக் குறிப்பாகுகின்றன். இதனலே, இப்பாசுரங்களுக்கு உரைதெரிவோர்க்குக் கோசிகன் குறிப்பது எவரை யெனத் தேர்தல் அருமையாகிச் சில பாசுரங்களைப் பற்றி ஐயம் பெரிதும் விளைகின்றது.

இவ்வண்ணம் விச்வாமித்திரன், நிலமடந்தை முலை சுரப்பச் சாதித்த பெருந்தகையையும், அணியரங்கந் தந்தானையும், இந்திரன் விடையேறுய்ச் சுமந்தவனை யும், குரைகடலை நெடுவரையாற் கடைந்து அமுதங் கொடுத்தவனையும், புலிப்போத்தும் புல்வாயும் ஒரு துறையில் நீருண்ண உலகாண்டவனையும், விற் பிடித்த அறமென்ன ஒருதனியே அமராவதி காத்த வனையும், உவரிநீர்க் கடல் தொட்டவரையும், புனற் கங்கை வானின்று கொணர்ந்தவனையும், செயற்கரிய பெருவேள்வி ஒருநூறு செய்தமைத்தவனையும், சந் திரனை வென்றவனையும், உருத்திரனைச் சாய்த்தவனை யும், துந்துவெனுந் தானவனைத் தொலைத்தவனையும், இந்திரனைவென்று திசையிரு நான்கும் செருவென்ற இரகுவையும், மல்லென்னுந் திரள்புயத்திற்கு அணி யென்ன இந்துமதியை வைத்த அயனையும் எடுத்தி யம்பி இராமபிரான் திருவவதாரஞ் செய்த செய்தியை மேலினி இயம்புவா ஞகின்றன்

மானேஜர் அறிக்கை.

ஸிங்கப்பூர் பினங்கு ,தென்ஆப்ரிக்கா முதலிய வெளிநாடுகளிலிருக்கும் நமது சந்தா நேயர்களிற் சிலர் இவ்வருடத்திய சந்தா தொகையை இன்னும் அனுப்பாதிருக்கின்றனர். அந்நாடுகளுக்கு வி. பி. அனுப்ப இய லாதாகையால், நாங்கள் வி. பி. அனுப்புவோம் என்று எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றார்களோ, யாதோ! தயவு செய்து அவர்கள் உடனே சந்தாவை அனுப்பினல் நலமாம். அல்லது இப்பொழுது அனுப்ப இயலாத பக்ஷத்தில் எப்பொழுது அனுப்புவார்கள் என்பதையாகிலும் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேம். இரண்டும் செய்யாதபக்ஷத்தில் அன்னவர்க்குப் பத்திரிகை வேண்டும் வேண்டா என்பதை நாங்கள் அறிய மார்க்கமில்லை யாகையால் பத்திரிகையை நிறுத்திவைக்க நேரிடும்.

பதினெட்டாம் பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற் றுக்கொண்டு பேசவும், எழுதவும் ஆரம்பித்துவிட லாம். இந்தப்பாஷையில் வியாபாரரகசியங்களைக் குறி த்துக்கொண்டால் பிறர் கண்டுகொள்ள முடியாது. இப்பாஷையில் ஸ்திரீகள் கணவர்களுடன் குடும்ப ரகசியத்தைப் பேசினல் பக்கத்திலுள்ளவர்கள் ஒற் றுக்கேட்டுப் பிறரிடம் சொல்லிக் கோள்மூட்ட முடி யாது. இது ஓர் அபூர்வ தமிழ்ப்பாஷை. சொல்பகாபி களே இருக்கின்றன. முந்துங்கள். விலை அணு 8.

அமிர்த குணபோதினி!

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவ ரைத் தமிழில் வெளிவந்ததில்லை. இதிலுள்ள விஷயங் கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்குப் புதியதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்தியாசமின்றிச் சகல மதஸ்தர்களையும் களிக் கச்செய்யும் வியாஸங்களைப் பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்தபின் பிறர் சிபார்சு இல்லாமல் நீங்களே வாங்குவீர்களென் பது நிச்சயம். பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும். வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூபா 1—4—0. மாதிரி காபி இனும்.

10-ம் பதிப்பு] **ஆங்கில ஆசான்** [வந்துவிட்டது

[எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.]

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியவிதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட் டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன்பதிப்புப் புத்தகங் களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்க வேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைவீதி, மதராஸ்.

கலா நிலயம்

1928 வருஷத்திய பிரதிகள் முழுவதும்
பைண்ட் செய்தும் செய்யாமலும்
எங்களிடம் கிடைக்கும்.

இதிலடங்கிய முக்கியமான கட்டுரைகள் தொட ர்ச்சியாய் வந்தன:—சேக்கிழாரும்திருக்கண்ணப் பரும், கம்பராமாயணம், தமிழ்ப்பாடம், அகப் பொருள் வரலாறு, காந்திமதி யென்னும் செந் தமிழ் நாவல், தேவாரமும் ஐந்திணையும், கிரேக்க தத்துவ சாஸ்திரங்களின் விளக்கம், கார்லைல் ரஸ்கின் எமர்ஸன் முதலிய ஆங்கிலப் புலவர் கட்டுரைகளின் மொழி பெயர்ப்பு, இன்னும் பல விஷயங்கள் அவ்வப்போது வந்தவை எண்ணிறந்தன.

விலை:—தபால் சார்ஜ் உள்பட:—

பைண்டு செய்யாதது
உள் நாட்டிற்கு ரூ 8-0-0.
வெளி நாட்டிற்கு 9-8-0.

ஆப்லெதர் கில்டு பைண்டு,
உள் நாட்டிற்கு ரூ. 10-0-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-8-0.

புல் காலிகோ கில்டு பைண்டு,
உள் நாட்டிற்கு ரூ. 9-8-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-0-0.

வேண்டுவோர் முன்னதாகப் பணம் அனுப் பிக் கேட்கவும்,

மானேஜர்,
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நம் முன்னேர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறேம். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதே. இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும் பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக் கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொது மதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆறுதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினறு பேறு	0	4
ஆலய வழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினன்கு புத்தகங்களும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனும்.

இன்றே எழுதுங்கள்!

நவீன கதா புத்தக சாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

இந்தியாவிலும் பர்மாவிலும்

எங்களை நீங்கள் - - -

- தெரிந்துகொள்ள வேண்டாமா!

கௌரவ நடத்தையும், சீக்கிரத்தில் உங்கள் காரியம் ஆக வேண்டியதையும், தகுந்த சாமான்களையும் நாடி வருவீராயின் எங்களிடம் வாருங்கள். வந்து எங்கள் வர்த்தக முறைகளையும் பொருள்களையுங் கண்டு மகிழுங்கள்.

ஓரே விலையாகப் பேரமில்லாது நாங்கள் சொல்லிவிடுவதால் உங்களுக்கு எவ்வளவு சௌகரியம் நாங்கள் செய்கிறோம் என்பதை மறவாதீர்.

கைத்திற வேலையில் தேர்ந்தவர்களால் நாங்கள் செய்து வைத்திருக்கும் வெள்ளிச் சாமான்களின் அழகை வந்து பாருங்கள். அழகொடு உபயோகமும் சேர்ந்து வீட்டிற் கையாள்வதற்கும் வெகுமதியாய்க் கொடுப்பதற்கும் தக்கவை அவை.

உங்கள் ஆதரவை வேண்டுகின்ற

ஸுராஜ்மல் லல்லுபாய் & கோ.,

வைர வியாபாரிகள், நகைகட்டுவோர், பொன் வெள்ளிக் கலன்கள் செய்பவர்.

135, பெரிய பஜார் திரிச்சிராப்பள்ளி.	**134**, மோகல் தெரு, ரங்கூன்.	**313**, எஸ்பளனேட், சென்னை.

SURAJMAL LALLUBHAI & CO.,

DIAMOND MERCHANTS AND JEWELLERS,

GOLD AND SILVER SMITHS.

135, Big Bazaar, TRICHY.	134, Mogul Street, RANGOON.	313, Esplanade, MADRAS.

வர்த்தமானம்

இங்கிலாந்தில் தேர்தல் :—காமன்ஸ் சபைக்கூட்டத்தில் உள்நாட்டு இலாக்கா மந்திரி, இங்கிலாந்தின் பொதுத்தேர்தல் மே மாதம் 30-ந் தேதி நடைபெறும் என்றும் பார்லிமெண்டு சபை மே மாதம் 10-ந் தேதி கலைக்கப்படும் என்றும் கூறினர்

***

ஆப்கன் நிலைமை :—ஆப்கன் நிலைமையில் பெரிய மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. பனிகாலம் கழிந்ததும் அமனுல்லாகான் கலகக்காரனை எதிர்த்துப் போராடுவார் என்றும், அக்காலை அவரே படைத்தலைமை வகிப்பார் என்றும் சொல்லப்படுகின்றது. ஜலல பாத்திலும், வேறு சில விடங்களிலும் ஜனங் அமனுல்லாபக்கம் திரும்பி வருகின்றனராம்.

***

சீனாவில் குழப்பம்:—சீனாவின் நிலைமையைப்பற்றி லாஸராபிஷப் என்னும் ஒருபாதிரி கூறுவதாவது:—சீனாவில் எங்கெங்கும் பொதுவுடைமை இயக்கம் பரவிவருகின்றது. அதன்பயனாகப் பல பாதிரிகளின் கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. பாதிரிகள்பலர் பயந்து ஓடிவிட்டனர். இந்நிலையில் பாதிரிகளைக் காப்பாற்ற உதவிவேண்டும்.

***

காரைநகர் வியாவிற் சைவ பரிபாலன வித்தியாசாலை :-இவ்வித்தியாசாலையில் உயர்தர வகுப்புகளுக்கு இலக்கண இலக்கியங் கற்பிப்பதற்கு மதுரைத்தமிழ்ச் சங்கப்பரிசைஷகொடுத்த பண்டிதர் ஒருவர்வேண்டும். அவர் சமய அறிவு,சங்கீத அறிவு உடையவராயிருத்தல் நன்று. நூல் நூற்கத் தெரியவேண்டும். ஸ்ரீமான் ராமலிங்கம், மானேஜர் என்ற விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

***

தொழிலாளர் இயக்கநிலை:—வங்காளத்திலும் வேறு பலவிடங்களிலும் தொழிலாளர் தலைவர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். அதைப்பற்றி சென்ற வாரம் கூடிய இந்தியச் சட்ட சபையிலும் வங்காளச் சட்ட சபையிலும் வாதம் நடத்தக் காங்கிரஸ்காரர்கள் முயன்றனர். ஆனால் வாதத்திற்கு அரசாங்கத்தார் அனுமதி தரவில்லை. இதை ஒட்டி பம்பாயில் 14 மில்களில் வேலை செய்துவந்த 25 ஆயிரம்பேர் வேலைநிறுத்தம் செய்துள்ளனர் என்று தெரிகின்றது.

***

காந்தியின் பர்மா யாத்திரை:—காந்தியடிகள் மார்ச்சு மாதம் 21ந்தேதியோடு வேலையை முடித்துக்கொண்டு 28-ந் தேதி திங்கட்கிழமை கல்கத்தா வந்துள்ளார். இரங்கூனில் பர்மியர் கூட்டமொன்றில் காந்தியடிகள் கூறியதாவது—" அஹிம்சை ஒரு பெரிய சக்தி. சூரியனைப்போல் ஒளியும், பொலிவும் உடையது. அஹிம்சை இருக்குமிடத்தில் அன்பும் அமைதியும் தான் இருக்க முடியும். புத்தமதத்தை இன்னும் பர்மியர் அறிந்துகொள்ளாமையால்தான் கட்சிகளும் மனத்தாங்கல்களும் இருந்து வருகின்றன. அஹிம்சையும், கதரும் பர்மாவில் பரவவேண்டுமென்பதே எனது கோரிக்கை". தொழிலாளர் கூட்டமொன்றில் காந்தி பேசுகையில் தொழிலாளர்களும் முதலாளிகளும் நண்பர்போல் பழகவேண்டுமென்று வற்புறுத்தினர். பர்மாவில் கதர்நிதிக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் வசூலாயுள்ளது.

***

ஸெனேட் சபைக்கூட்டம்:—சென்றவாரம் சனியன்று சினேட்சபைக்கூட்டம் நடைபெற்றது. முதன் முதலாக வரவு செலவுத் திட்டம் ஆயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

பிறகு தமிழ் சமிஸ்கிருத பண்டிதர்களின் நிலைமையைஉயர்த்தும்வகையில் சினேட்டார் வேண்டுவதைச் செய்யவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டது.

ஸ்ரீமான் அரங்கநாதன் அவர்கள், மானுமிப் பயிற்சிக்காகப் பம்பாயில்ஏற்படுத்தப்பட்டிற்கும் வசதியை சென்னை மாணவர்கள் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் அதற்கென வருடாவருடம் சென்னையிலிருந்து இரண்டு மாணவர்களைச் சர்க்கார்செலவில் அனுப்பவேண்டுமென்றும் பிரேரேபித்தார். இது அங்கீகரிக்கப்பட்டது. ஸ்கூல் பயினல் பரிட்சை தேரிய பையன்கள் இருவர் மானுமிப் பயிற்சிக்குஅனுப்பப்படுவர். கூடுமானவரை செம்படவஜாதியைச் சேர்ந்தவர்களே இதற்கென எடுக்கப்படுவார்கள். வருஷா வருஷம் ஆகஸ்டுமாதம் மாணவர் எடுக்கப்படுவர். ஆகவே இப்பயிற்சிபெற விரும்புவோர் ஜுலை முதல் வாரத்திற்குள் மனுச் செய்துகொள்ள வேண்டும்.

***

மாஜி ஜட்ஜி கைதியானர்:—மாஜி ஜட்ஜியும் கல்கத்தா ஹைக்கோர்ட்டின் கவர்ன்மெண்டு வக்கீலுமான ராவ்பகதூர் துவாரகநாதர் என்பவர், ரஸிக மோகனராயின் விதவை கொடுத்த பிராதின்மேல் மோசம் செய்த குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டுள்ளார். பிராதின் விபரம்:—மேற்படி விதவையின் எஸ்டேட் மானேஜரும், மைனர்களின் கார்டியனுமான சுரேஷ்சந்திர ஸன்யால் என்பவரிடம் அவ் விதவை ஒருலட்சம் ரூபாய்க்குச் செக்குக் கொடுத்து அலிப்பூர் கலெக்டரால் கிஸ்தி ஏலம் போடப்படும் நிலத்தை வாங்கும்படி கூறினர். குற்றம் சாட்டப்பட்டுள்ள துவாரகநாதர் கடனாளியாயிருந்ததால் தமது நிலத்தை வாங்குமாறு எஸ்டெட் மானேஜரைத் தூண்டினர். விதவை சைலசுதாதேவி துவாரகநாதர் நிலத்தை வாங்க மறுத்துவிட்டார்,எனினும் எஸ்டெட் மானேஜர் குற்றம் சாட்டபட்டுள்ளவருடன் சேர்ந்து கொண்டு அதே நிலத்தைத் தன்பேரால் வாங்கி, இருவரும் பங்கிட்டுக் கொண்டனர். எஸ்டெட் மானேஜரும் இதில் சம்பந்தப்பட்ட வேறுசிலரும் கைதி செய்யப்பட்டுள்ளனர்.

ராவ்பகதூர் துவாரக நாதரும் அவரது பிள்ளையும் பதினையிர ரூபாய் ஜாமினில் விடப்பட்டிருக்கின்றனர்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

இதன் விலை ரூ. 2-0-0

இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

அழகிய சீமை கலிகோ டைண்டு செய்யப்பட்டது. கண்ணைக் கவரத்தக்க அனேக ஆப்டோன் படங்களுடனும், லயன் பிளாக்குகளுடனும் 400 பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேப்பரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது

உலகத்தில் ஆண்மக்களும், பெண்மக்களும் ஒரேவிதமான அன்புடையவர்களாய் ஒருவர்மீதொருவர் உண்மைக்காதல்கொண்டு ஒருவரையொருவர் மணந்து கூடிக் களிப்புற்று, நற்சந்ததிகளைப்பெற்று. இல்லற நீதிகளை வழுவாமற்செய்து வாழ்ந்துவருவதே இன்பவாழ்க்கையாம்; இத்தகைய வாழ்வை அடைதற்குரிய மார்க்கங்களை உணர்ந்துகொள்வதற்கேதுவாக நம்முன்னோர்கள் அகப்பொருள் நூல்களை, வெளியிட்டிருக்கின்றனர்.

இதில் நமது பூர்வீகச் சாஸ்திரங்களின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துக்களும் வேறு பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும் இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அனேக விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஆரியன் புக் டிபோ, நெ. 19, தாண்டவராயமுதலி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது !

"ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகை.

தமிழ் மக்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகை வெளி வந்து விட்டது- மத ஆராய்ச்சி தமிழ் மொழி வளர்ச்சி, அரசியல் அறிவு, நவீனமுறையில் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முயற்சிக்கான அறிவு வளர்ச்சி சுகாதார அபிவிருத்தி, கிராம முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி, பெண்கள் முன்னேற்றம், மாணவர் அறிவைப் பெருக்கல், தேச விடுதலைக்காகப் பிரசாரம் செய்தல் முதலிய விஷயங்களோடு விநோத விஷயங்களும் வேடிக்கைப் படங்களும், கற்பனைச் சிறு கதைகளும் படிப்போர் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் முறையில் வெளி வருகின்றன. இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்.

சந்தா விபரம்:—உள்நாடு வருட சந்தா ரூ. 3. ஆறு மாத சந்தா ரூ. 1-12. வெளிநாடு வருட சந்தா ரூ. 4.
(வெளி நாடுகட்கு 6 மாத சந்தா இல்லை)

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

189048

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—
"KALANILAYAM"
11, VELLALA STREET.
Purasawalkam, MADRAS.

3C
m24, 1128
N29 2

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E Kumariah, B.A., B.L. (Editor)